Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+IV

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 18 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 24 (02.07.2005) சனிக்கிழமை இதழ்:275

## பொதுக்கட்டமைப்பை கவனிக்க 3 அமைச்சர்கள், 3 அதிகாரிகள்!

கொழும்பு —

சுனாமி நிவாரணசபையின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி சந்திரிகாவால் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் மூவரும், அதிகாரிகள் மூவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகிய மூன்று அமைச்சர்களுடன் ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல ஜனாதிபதியின் செயலர் கருணாரட்ண, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகிய மூன்று அதிகாரிகளுமே நியமிக்கப்பட்டவர்களாவர். (தே)

## பொதுக்கட்டமைப்பில் ஒப்பமிட்டோரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு!

கொழும்பு —

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் -

இந்தப் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் அரச மற்றும் புலிகள் தரப்பில் கைச்சாத்திட்டோரையும் நிதியமைச்சின் செயலாளரையும் நீதிமன்றில் ஆஜராகும்படி உத்தரவிட்டது.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சுனாமி நிவாரணசபை ஆவணத்துக்கும், பிரதிவாதிகள் கைச்சாத்திட்ட ஆவணத்துக்கும் இடையே வித்தியாசங்கள் இருப்பதாகவும், எனவே - கைச்சாத்திடப்பட்ட உண்மையான ஆவணத்தின் பிரதியை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்குமாறும் ஜே.வி.பி. மற்றும் தேசிய பிக்கு முன்னணி என்பவற்றின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.எம்.சுமதிபால வேண்டுகோள் விடுத்தார்.

இவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் - எதிர்வரும் 20 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தின் பணிப்பாளருக்கும், நிதியமைச்சின் செயலாளருக்கும், ஜனாதிபதியின் செயலாளருக்கும் அழைப்பாணை விடுத்துள்ளார்.

ஜே.வி.பியும், தேசிய பிக்கு முன்னணியும் தனித்தனியாக நீதிமன்றத்தில் தொடுத்திருந்த 3 வழக்குகளிலும் முதலாவது (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பாதுகாப்பு தீவிரம்; உஷார்நிலையில் படையினர்!

கொழும்பு —

அரசாங்கத்துக்கு விடுதலைப் புலிகளால் கொடுக்கப்பட்டிருக்கும் 14 நாட்கள் காலக்கெடுவை அடுத்து - கிழக்கில் பாதுகாப்பை தீவிரப்படுத்தியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போராளிகளின் போக்குவரத்து, நடமாட்டம் ஆகியவற்றின்போது - படையினர் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரி புலிகள் 14 நாட்கள் கால அவகாசத்தை நேற்றுமுன்தினம் அரசுக்குக் கொடுத்திருந்தனர்.

இதையடுத்தே - அரசாங்கம், கிழக்கில் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தியுள்ளதுடன், படையினரை உச்சவிழிப்புணர்வு நிலையில் இருக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முப்படையினரும், பொலிஸாரும் - தமது பிரதான தளங்கள், முகாம்கள், காவலரண்களில் விழிப்புடன் இருக்குமாறும் - வீதிச் சோதனைகளை பொலிஸார் மேற்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே விமானிகள் புலிகளுக்கு பயிற்சியாம்!

கொழும்பு —

நோர்வே விமானிகள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு விமானம் செலுத்துதல் உட்பட விசேட பயிற்சிகளை வழங்குவதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


இது குறித்து அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கிளிநொச்சி இரணைமடுப்பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் விமான ஓடுதளத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் 25 உறுப்பினர்களுக்கு இந்தப் பயிற்சிகளை நோர்வே விமானிகள் அளித்து வருகின்றனர்.

நிலக்கண்ணிகளை அகற்றுவது மற்றும் மனிதாபிமான செயற்பாடு என்ற போர்வையில் நோர்வே விமானிகள் அறுவர் கிளிநொச்சிக்கு இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்காகச் சென்றுள்ளனர். இவர்களது விமானம் செலுத்தும் பயிற்சிக்கு விடுதலைப் புலிகளிடமுள்ள இலகு இயந் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் காலக்கெடு குறித்து அரசிடம் தெளிவுபடுத்தினார் கண்காணிப்புக்குழு தலைவர்!

## தனித்தரப்பு வழங்காததை கண்டித்து கிழக்கில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!



மட்டக்களப்பு —

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் முஸ்லிம் களுக்கு தனித்தரப்பு அங்கீகாரம் வழங்கப்படாததைக் கண்டித்து - மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பல்

# கண்காணிப்புக்குழு தலைவர்!

கொழும்பு

தமது போராளிகளுக்கான பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்த புலிகள் விடுத்திருக்கும் 14 நாட்கள் கால அவகாசம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பயணங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் வழங்கிய இருவார கால அவகாசம் குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று அரசாங்கத்துக்கு அறிவித்தனர்.

அரசாங்கத்தின் சமாதான செயலகப் பணிப்பாளப் ஜயந்த தனபாலவைச் சந்தித்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் - விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு சம்பந்தமாக அவர்களால் முன்வைக்கப்பட்ட யோசனைகளைக் கையளித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




முஸ்லிம் களுக்கு தனித்தரப்பு அங்கீகாரம் வழங்கப்படாததைக் கண்டித்து - மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பல்வேறு இடங்களிலும் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் ஒன்றியமும், தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகமும் இணைந்து பல்கலைக்கழக முன்றலில் நேற்றுக்காலை ஜீலை எழுச்சிப் பிரகடனம் ஒன்றையும் இது தொடர்பாக பிரகடனப்படுத்தினர்.

ஒலுவிலில் உள்ள தென்கிழக்கு பல்கலைக் கழக முன்றலில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் எழுச்சிப் பிரகடனத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் வீட்டருகே நடமாடிய 5 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டருகே சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதான குற்றச்சாட்டின் பேரில் ஐந்து தமிழ் இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் வெள்ளவத்தை லொயாட்ஸ் வீதியிலுள்ள டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டிற்கருகே நடமாடிய இந்த இளைஞர்களை பம்பலப்பிட்டி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர்.

சுவிகரன் தங்கயைா, சிதம்பரன் நடராஜா், ஆறுமுகம் கமலேசன், கோமல் செவ்வியதேஷ், கே.ஆர்.கருணாநிதி ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

விசாரணையின்போது இவர்கள் பதிலளிக்கத் தடுமாறியதாகவும், தங்களை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் எதனையும் வைத்திருக்கவில்லை என்பதால் இவர்களைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஐந்து இளைஞர்களும் கொழும்பு, நானு ஓயா,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை புத்தர் சிலையை கண்டித்து யுனெஸ்கோ முன்பாக ஆர்ப்பாட்டம்!

பாரிஸ்

திருகோணமலையில் சட்ட விரோதமாக - அரசியல் நோக்குடன் புத்தர் சிலை நிறுவப்பட்டதைக் கண்டித்தும், இந்தப் புத்தர் சிலையை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரியும் - பிரான்ஸ் தலைநகர் பாரிஸுல் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்துக்கு முன்பாக - தமிழர் மனித உரிமை மையகத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஏராளமான தமிழீழ மக்களும் அத்துடன், சில தோழமை அமைப்புகளின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

அமைதிப் போராட்டம் பாரிஸில் ஏழாவது மாவட்டத்தில் யுனெஸ்கோ தலைமைக் காரியாலயத்துக்கு முன்பாகவுள்ள பொன்ரினே சதுக்கத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பமாகியது.

போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் அரசும், அதன் ஊதுகுழலான நீதித்துறையும் தமிழ் மக்கள் மீது பாரபட்சமாக நடந்து கொள்வதைக் கண்டித்து வாசக அட்டைகளை தாங்கியிருந்தனர்.

யுனெஸ்கோவே திருகோணமலையில் புத்தர் சிலை விவகாரத்தில் உடன் தலையீடு செய்து சிலையை அகற்று.

நாங்கள் புத்தருக்கு எதிரானவர் அல்ல. ஆனால், சட்டத்திற்கு முரணாக அரசியல் கலந்த புத்தர் சிலைக்கு எதிரானவர்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பேர்கெவ் நிறுவனத்தின் அதிகாரிகள் யாழ்.வருகை

யாழ்ப்பாணம் —

முரண்பாட்டு கற்கைகளுக்கான பேர்கெவ் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு இன்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

முரண்பாட்டு கற்கைகளுக்கான பேர்கெவ் நிறுவனத்தைச் சேர்ந்த லக்சி விமலராஜா, சூ வில்லியம்ஸ், கலாநிதி இனோஸ் றீன் கார்ட் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சமாதான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்த நிறுவனத்தால் கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காகவே இந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

# சர்வதேச கூட்டுறவு தினம்

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் நடத்தும் 83 ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் இன்று பிற்பகல் 3 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் ந.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பொ.கனகசபாபதி பிரதம விருந்தினராகவும்,

தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுதுறைப் பொறுப்பாளர் பொ.புஸ்பகுமார், வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ந.இன்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்,

நெல்லியடி மத்திய மகாவித்தியாலைய அதிபர் சேதுராசா, விக்னேஸ்வராக் கல்லூரியின் அதிபர் பே.சிதம்பரம், வட.மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. வி.சுகுமாரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தடகளப் போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ். பல்கலைக்கழகத்தின் பீடங்களுக்கிடையிலான தடகள விளையாடடுப் போட்டி இன்றும், நாளையும் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கும் நாளை காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளது.

# போட்டி நடைபெறமாட்டாது

யாழ்ப்பாணம் —

தமிழீழ விளையாட்டுத் துறையால் கரும்புலிகள் நாளை முன்னிட்டு தேசிய ரீதியாக நடத்தப்படவிருந்த சைக்கிளோட்டம் மற்றும் மரதனோட்டப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் அறிவிக்கப்பட்ட திகதியில் நடைபெறாது எனவும், போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தமிழீழ விளையாட்டுத் துறையினர் அறிவித்துள்ளனர்.


## சிறு விளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)

**ராஜா** யாழ்ப்பாணம்

ரஜினிகாந், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த




பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

2 ஆவது வாரமாக சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்

அந்நியன்
anniyan



இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்

விசேட காட்சிகளும் உண்டு

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சத்தியராஜ், சுனிதாவர்மா வடிவேல் நடித்த

6.'2"

பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

**நாகஞ்ஜலி** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

அஜித், தேவயானி நடித்த



காதல் கோட்டை

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்

சுனாமி போன்ற இயற்கை அழிவுகளை சித்தரிக்கும் திரைக்காட்சி

DAY AFTER TOMORROW

(நாளை மறுநாள்)

காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)



# டயலொக் டெலிகொம்
## ஆரம்ப பொது வழங்கல்

**டயலொக் ஆரம்ப வழங்கல் குறித்த அறிமுகம் இடம்பெறவுள்ளது.**

காலம் : ஜுலை 4 ஆம் திகதி 2005

நேரம் : மு.ப. 11.00 மணி

இடம் : வரையறுக்கப்பட்ட யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் 127,
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

நீங்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பினால் தயவு செய்து யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியில் உள்ள திரு.வசந்தகுமார் உடன் தொடர்பு கொண்டு அழைப்பிதழ்களை பெறமுடியும்.

அழைப்பிதழ்களை பெறுவதன் மூலமே இதில் நீங்கள் பங்குபற்ற முடியும்

தொலைபேசி : 021 2227882, 021 2223463
021 2222787, 0777 164966



**நமது ஈழநாடு**
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நடாத்தும் 2005 ஆம் ஆண்டு தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென இலங்கையிலுள்ள முன்னணி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும்

# முன்னோடிக் கருத்தரங்கு

## விபரம் விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்

**யாழ்.மாவட்டத்துக்கான அனுசரணை வழங்குவோர்**

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்



செலிங்கோ லைஃப்
சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது செலிங்கோ
சுன்னாகக் கிளை

DSI
சுப்ப சூஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்

BOC
ரண் கெகுழ
சிறுவர் சேமிப்புக் கணக்கை
மண்டபத்தில் ஆரம்பிக்கலாம்

யாழ்.மாவட்டத்திலுள்ள மாணவர்கள் கீழுள்ள கூப்பன்கள் ஐந்தை நிரப்பி உடனடியாக "சந்தைப்படுத்தல் பிரிவு, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்." எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**கிளிநொச்சி மாவட்டத்துக்கான அனுசரணை**

மீண்டும் புதுப்பொலிவுடன்... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...



# குமரகுரு
## புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்.சாலை, கிளிநொச்சி.
Tel : 021 - 228 5971



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாணவர்கள் கீழுள்ள கூப்பன்கள் ஐந்தை நிரப்பி "நமது ஈழநாடு, கிளைக்காரியாலயம், 152, யாழ்.சாலை கிளிநொச்சி" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
இங்கே வெட்டவும்

## விண்ணப்பப் படிவம்

பெயர் :- ..............................

தற்போதைய முகவரி:- ..............................

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :- ..............................

மாவட்டம் :- ..............................

அலுவலக பாவனைக்கு
இலக்கம்
மாவட்டம்

.............................. ..............................
பெற்றோர்/பாதுகாவலர்/ஆசிரியர்கையொப்பம் மாணவர் கையொப்பம்



# யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## கிளினோல் சோப் வெகுமதி (தொலைக்காட்சிப்பெட்டி) அதிர்ஷ்ட சீட்டிழுப்பு

கிளினோல் சோப் கொள்வனவு செய்து எமது போட்டி விதிளுக்கு அமைவாக 06 மேலுறைகளை அனுப்பி வைத்த போட்டியாளர்களிலிருந்து அதிர்ஷ்டசாலி ஒருவரை தெரிவு செய்வதற்கான சீட்டிழுப்பு கீழ்வரும் விபரப்படி நடைபெறவுள்ளதால் இதில் விண்ணப்பம் அனுப்பிய போட்டியாளர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

காலம் : 02.07.2005 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 4.00 மணி
இடம் : யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
111 பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(C/4255)

# பொதுக்கட்டமைப்பை தோற்கடிக்க நாடாளுமன்றில் பிரேரணை!

## ஜாதிக ஹெல உறுமய திட்டம்



கொழும்பு —

பொதுக்கட்டமைப்பை செல்லுபடியற்றதாக்குவதற்காகத் தனிநபர் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு ஜாதிக ஹெல உறுமய திட்டமிட்டுள்ளது.

அரசாங்கத் தரப்பின் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நபரின் குடியுரிமையை இரத்துச் செய்யுமாறும், அடிப்படை உரிமை மீறல் என்ற வகையிலும் இரண்டு வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்திருப்பதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்காக நாடாளுமன்றத்துக்கு வெளியேயும், உள்ளேயும் ஜாதிக ஹெல உறுமய பாரிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

சுனாமி நிவாரண சபைக்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய எடுக்கவுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிக்கும் வகையில், ஒழுங்கு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மகா நாட்டிலேயே அத்துரலிய ரத்ன தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# அதிகாரத்தை அனுபவித்த பின்பே ஜனாதிபதி சந்திரிகா புலம்புகின்றார்

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு —

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் பலாபலன்களை இரு தடவைகள் - 12 வருடங்கள் அனுபவித்த பின்பு, அம் முறைமை தவறு, அதைத் திருத்த வேண்டும் எனக் கூறுவது வேடிக்கையானது என, ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது பதவிக் காலம் முடிவடைந்து வீடு செல்லும் இறுதி நேரத்தில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மாற்றி அமைக்க வேண்டும் எனத் தெரிவித்து வருகிறார். அவரின் தவறான அணுகுமுறைகளால் இன்று நாடு பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது.



சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், பொருளாதார ரீதியாக நாடு எதிர்கொண்டுள்ள பாரிய சுமை, யுத்த நிறுத்தம், சமாதானம், பொதுக் கட்டமைப்பு உருவாக்கத்துக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் எனப் பல பிரச்சினைகளுக்கு நாடு முகம் கொடுக்க முடியாது திணறும் போது, ஜனாதிபதி முறைமை குறித்து பேசுவது அர்த்தமற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பை ஆதரிப்போர் ஜனாதிபதியாக வரமுடியாதாம்!

## தேசப்பற்று இயக்கம் கூறுகிறது

கொழும்பு —

பொதுக்கட்டமைப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்தாத எவரும் ஜனாதிபதித் தேர்த லில் வெற்றிபெற முடியாது. இவர்கள் வெற்றி பெற மக்கள் இடமளிக்கமாட்டார்கள் என்று, தேசப்பற்று தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குண வன்ச தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாட்டில் முக்கியமான பிரச்சினைகள் இருக்கையில், சில தலைவர்கள் விலைவாசியைப் பற்றிக் கதைத்துக்கொண்டு ஜனாதிபதியாகக் கனவுகாண்கிறார்கள்.

2002 இல் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாகவும், 2005 இல் சுனாமி நிவாரண சபை உடன்படிக்கையின் ஊடாகவும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், செயற்பட்ட தலைவர்கள் 2006 இல் நாட்டைப் பொறுப்பேற்க முடியாத வகையில், நாம் மக்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுப்போம்.

இந்த உடன்படிக்கைக்கு எதிராக நாம் உயர் நீதிமன்றம் செல்ல பிரபல வழக்கறிஞர்களை நாடியுள்ளோம்.

மகாநாயக்கர்களுக்கு இந்த உடன்படிக்கையைக் கையளித்து, அது சம்பந்தமாக அவர்களுடன் பேச்சு நடத்தப்படும் எனக் கூறி, அவர்களை ஏமாற்றினார்கள். இப்போதாவது மகாநாயக்கர்கள் இதுகுறித்துப் பயமின்றிப் பேச முன்வரவேண்டும்.

வடக்கு - கிழக்கில் 276 புராதன சொத்துக்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன. உடன்புடிக்கையின் பின்னர் அவையும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. நாட்டை அழிக்கும் சக்திகளைப் பின்தள்ள, தேசப்பற்றுள்ள இயக்கம் மக்களுடன் வீதியில் இறங்கிப் போராடத் தயாராகவுள்ளது.

சுனாமி நிவாரணசபை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட முன்னர் கூறப்பட்டதைவிடப் பயங்கரமான ஒன்றாகும்.

2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் மூலம், ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தமிழீழத்துக்கு அத்திவாரமிட்டார்.

சந்திரிகா பண்டாரநாயக்க அந்த வீட்டுக்குச் சுவர்களை எழுப்பி, கூரை போட்டுக் கொடுத்துள்ளார். உடன்படிக்கையின் பின் தற்போது அந்த வீட்டில் சிறுசிறு வேலைகளே உள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இருக்கும் நெருக்கத்தால்தான், ஜனாதிபதி இவ்வாறானதொரு காட்டிக்கொடுப்பைச் செய்துள்ளார்.

2002 இல் ஐக்கிய தேசியக் கட்சி புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதன் நிலைப்பாட்டைக் கட்சியின் செயலாளர் ஊடாக வெளிப்படுத்தியது.

அந்த உடன்படிக்கையை ஜனாதிபதிக்கு, நாடாளுமன்றத்துக்கு, எதிர்க்கட்சிகளுக்கு, மக்களுக்கு மறைத்து கைச்சாத்திடப்பட்டதாகக் கூறினாலும், இன்று ஜனாதிபதி கைச்சாத்திட்டிருக்கும் சுனாமி நிவாரணசபை உடன்படிக்கை பற்றி மகாநாயக்கர்களுக்குப் பொய்சொல்லப்பட்டுள்ளது. இந்தியாவை ஏமாற்றியுள்ளது.

பிரதமருக்கு, நாடாளுமன்றத்துக்கு, அமைச்சரவைக்கு எதுவும் தெரியாது. ஆனாலும், கைச்சாத்திடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சுனாமி பணிப்பாளராக கலாநிதி பி.பி.ஜெயசுந்தர

கொழும்பு —

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ நிறுவனப் பணிப்பாளராக நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தரவை அரசின் பிரதிநிதியாக நியமிக்க தீர்மானித்துள்ளதாக அமைச்சரொருவர் தெரிவித்தார்.

சீனாவில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள கலாநிதி ஜெயசுந்தர, இலங்கைக்குத் திரும்பிய பின்னர், ஜனாதிபதியால் இந்த நியமனம் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் நிரந்தர நியமனம்

கொழும்பு —

கல்வியமைச்சில் இணைத்துக் கொள்ளப்பட்ட 17 ஆயிரம் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி நிரந்தர நியமனம் வழங்கப்படுமென கல்வியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடத்தி, 20 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிக்கிடையில் இவர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், ஓகஸ்ட் மூன்றாம் திகதி தொடக்கம் அவர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவரெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# சோமாலியாவில் கடத்தப்பட்ட இலங்கையரை விடுவிக்க நடவடிக்கை

சோமாலியாவில் போராளிகளால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இலங்கை மாலுமி ஒருவரை விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சோமாலியாவுக்கு ஐக்கிய நாடுகளின் உணவு நிவாரணங்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று கடந்த திங்கட்கிழமை போராளிகளால் கடத்தப்பட்டிருந்தது.

இந்தக் கப்பலில் இலங்கை மாலுமி ஒருவர் கடமையாற்றியதாகவும், அவரை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்; பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் 850 தொன் உணவு வகைகள் கொண்டுசெல்லப்பட்டன. இதேவேளை இந்தக் கப்பலை கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றதாகவும், கப்பலில் இருந்த இலங்கை மாலுமி உட்பட மற்றும் சிலரை விடுவிப்பதற்கு ஐந்து லட்சம் அமெரிக்க டொலர்களைக் கப்பமாகக் கோரியுள்ளதாகவும் ரொய்ட்டர் செய்திவெளியிட்டுள்ளது.

இலங்கை மாலுமியும், மற்றைய சிலரும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோர்வேயில் சுனாமி நிதி சேகரிப்பு மோசடியில் தமிழ் பாதிரியார்!

நோர்வே —

இலங்கையில் சுனாமி நிவாரணப் பணிகளுக்கெனக் கூறி நோர்வே நாட்டில் நிதிசேகரிப்பில் ஈடுபட்ட தமிழ்ப் பாதிரியார் ஒருவர் பெருமளவிலான நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களில் வெளியாகிய தகவல்களின்படி, தென்கிழக்காசியாவில் அதிகம் சுனாமியால் இலங்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு உதவும் வகையில், நோர்வே நாட்டில் இயங்கும் கிறிஸ்தவ சபையொன்று வீதி வீதியாகவும், தேவாலயங்கள் ஊடாகவும் பல லட்சம் நோர்வே நாட்டுக் குறோணர்களைத் திரட்டியிருந்தது. இந்தக் கிறிஸ்தவ சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பாதிரியார் ஒருவர் இந்த நிதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

சுனாமிக்காகச் சேகரிக்கப்பட்ட பணம் அனைத்தும் வங்கியில் வைப்பில் இடப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் பணத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் பணத்தைக் கணக்குக் காட்ட முன்னர் மோசடி செய்ய முயற்சித்துள்ளார். வங்கி அட்டையை எடுத்துக்கொண்டு நோர்வே நாட்டின் தலைநகரிலுள்ள வங்கிகளுக்குச் சென்று, ஒரே தினத்தில் ஏழு தடவைகள் பணத்தை மீளப் பெற்றுள்ளார்.

முதலாவதாக 56 லட்சம் ரூபாவும், இரண்டாவது தடவையாக 2 லட்சம் ரூபாவும், மூன்றாவது தடவையாக 13 லட்சம் ரூபாவும், நான்காவது தடவையாக 16 லட்சம் ரூபாவும், ஐந்தாவது தடவையாக 13 லட்சம் ரூபாவும், ஆறாவது தடவையாக 12 லட்சம் ரூபாவும், ஏழாவது தடவையாக 25 லட்சம் ரூபாவுமாக ஒருகோடி 37 லட்சம் ரூபாவை இவர் மோசடி செய்துள்ளார்.

இதனை சுனாமி நிதியாக கிறிஸ்தவ சபைக்கு சேகரித்த பணமாக தமிழ்ப் பாதிரியார் நோர்வேத் தரப்பினருக்குக் கணக்குக் காட்டியுள்ளார்.

இந்தப் பண மோசடி தொடர்பாக இரகசியத் தகவல்களை இரண்டு தமிழர்கள் நோர்வே அரசுக்கு தெரிவித்தனர். தமிழ்ப் பாதிரியார் அகப்பட்டார்.

இவர்கள் இந்த மோசடியை மறைத்திருந்தால், இவை வெளியில் தெரிந்திராது என்றும், மோசடிக் கும்பலுக்குள் ஏற்பட்ட உள்முரண்பாடே காட்டிக்கொடுத்தமைக்கான காரணம் எனும் இந்தச் செய்தியை நோர்வே நாட்டின் அனைத்து அரச, தனியார் ஊடகங்களும் முதன்மைச் செய்தியாக வெளியிட்டுள்ளதாக நோர்வே நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோசடி செய்தவர் தன்னிடம் பணம் எதுவும் கையில் இல்லை என்று கூறியுள்ளதுடன், அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பண மோசடியில் ஈடுபட்டவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் முன்னாள் ஆதரவாளர் என்றும், இவரைக் காட்டிக்கொடுத்தவர்கள் புளொட் அமைப்பின் தீவிர ஆதரவாளர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேநேரம் சுனாமிக்குத் தனிநபர்களாக நிதி சேகரித்த தமிழர்கள் பலர், வெளிநாடுகளில் கோடீஸ்வரராக மாறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இலவச மருத்துவ முகாம்


சாவகச்சேரி —

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சரசாலை தெற்கு, சரசாலை மத்தி ஆகிய கிராமங்களை ஒன்றிணைத்து, இன்று சனிக்கழமை சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் டொக்டர் பாலசுப்பிரமணியம் தலைமையில் மருத்துவ பீட மாணவர்கள் இலவச மருத்துவ முகாமொன்றை நடத்தவுள்ளனர்.

இந்த மருத்துவ முகாமில் - சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு, வைத்திய ஆலோசனைகள், மருந்துகள் வழங்கல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதில் கிராமத்து மக்கள் அனைவரும் மருத்துவ தேவையைப் பூர்த்திசெய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## நட்வெஸ்ட் தொடர்

# பங்களாதேஷ் அணியிடம் போராடி வென்ற அவுஸ்ரேலியா



காண்டர்பரி—


நட்வெஸ்ட் முத்தரப்பு தொடரில் நேற்று முன்தினம் கிளார்க் கைகொடுத்ததால்



அவுஸ்ரேலிய அணி - பங்களாதேஷை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நட்வெஸ்ட் இறுதிப் போட்டிக்கு ஏற்கனவே இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகள் தகுதி பெற்றுவிட்டன. கான்டர்பரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முக்கியத்துவம் இல்லாத கடைசி லீக் போட்டியில் அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகள் மோதின.


நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலியா களத்தடுப்பைத் தேர்வுசெய்தது. பங்களாதேஷின் முதன்நிலை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். நம்பிக்கை நாயகன் அஷ்ரபுல் கூட 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 5 விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்கள் எடுத்துத் தவித்த அணியை நபீஸ் 75, காலித் மசூத் 71 ஓட்டங்களை எடுத்து அணியை மீட்டனர். பின்னர் வந்த வீரர்கள் பொறுப்பாகச் செயற்பட பங்களாதேஷ் அணி



50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 250 ஓட்டங்கள் என்ற கௌரவமான ஸ்கோரை எட்டியது. அவுஸ்ரேலியா தரப்பில் வட்சன் 3, பிரட்லீ 2, ஜிலெஸ்பி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அடுத்துக் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 3 விக்கெட் இழப்புக்கு 83 ஓட்டங்களை எடுத்துத் திணறியது. கில்கிறிஸ்ட் 45, ஹைடன் 1, மார்ட்டின் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அடுத்து கப்டன் பொண்டிங், கிளார்க் இணைந்து நம்பிக்கை தந்தனர்.

பொண்டிங் 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பங்களாதேஷ் பந்து வீச்சாளர்கள் துல்லியமாகப் பந்துவீச உலக சம்பியனான அவுஸ்ரேலியா ஓட்டங்களை எடுக்கப் போராட வேண்டியிருந்தது.



பங்களாதேஷிடம் இன்னொரு தோல்வியைச் சந்தித்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த கிளார்க் வெற்றியை உறுதி செய்தார். அவுஸ்



ரேலியா 48.1 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 254 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது. கிளார்க் 80, சைமண்டஸ் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகனாக பங்களாதேஷின் நபீஸ் தேர்வு செய்யப்பட்டார்.

# விம்பிள்டனில் ஷரபோவா தோல்வி!



லண்டன்—

விம்பிள்டன் அரையிறுதியில் நடப்பு சம்பியன் மரியா ஷரபோவா அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

லண்டனில் நேற்றுமுன்தினம் நடந்த விம்பிள்டன் பெண்கள் ஒற்றையர் அரையிறுதியில் 18 வயதான ரஷ்யாவின் ஷரபோவா - வீனஸ் வில்லியம்ஸைச் சந்தித்தார். இளமை கைகொடுக்கும் என்பதால் ஷரபோவா எளிதாக வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பழைய வேகம் இன்னும் போகவில்லை என்பதை நிரூபித்தார் 25 வயதான வீனஸ். முதல் செட்டில் டை பிரேக்கர் மூலம் வென்ற இவர் இரண்டாவது செட்டை மிக எளிதாகக் கைப்பற்றினார். வீனஸ் 7-6, 6-1 என்ற நேர் செட்களில் ஷரபோவாவை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன் னேறினார். பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் ஷரபோவா வின் கனவு தகர்ந்தது.

மற்றொரு அரையிறுதியில் அமெரிக்காவின் டேவன் போர்ட் - பிரான்சின் அமிலி மவுரிஸ்மோவை சந்தித்தார். இந்தப் போட்டியில் டேவன் போர்ட் 6-7, 6-7, 5-3 என்ற கணக்கில் வெற்றியின் விளிம்பில் இருந்தார். எனினும் மழை காரணமாகப் போட்டி ஒத்தி வைக்கப்பட்டது

# பிரதேச செயலக கிரிக்கெட் நல்லூர் அணி சம்பியன்!

நெடுந்தீவு—

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன், யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனானது.

இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலக அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் செயலக அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது

இதில் சுகுமார் 18, சர்வானந் 9, ரமணன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். சந்திரன் 3, றிக்ஷி 2, காண்டீபன், ஜெயச்சந்திரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதேவேளை, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ் செயலக அணி 13.2 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 41 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது. இதில் காண்டீபன் 12, விக்கி, ஜெயகாந்தன் ஆகியோர் தலா 06 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரமணன், சர்வானந், சுரேன் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மல்லாகம் ஆர்.டி.எஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 14 பிரதேச செயலக அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

(113)

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பம்!

யாழ்ப்பாணம்—

கே.சி.சி.சி வெற்றிக்கிணத்துக்காக, கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் நடத்தும் 30 ஓவர்களைக் கொண்ட லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தச் சுற்றுப்போட்டியில் ஏ பிரிவில் யாழ்.பல்கலைக்கழக அணி, ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகமும் -

பி பிரிவில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், அரியாலை சென்றல் விளையாட்டுக் கழகமும் -

சி பிரிவில் கொக்குவில் கே.சி.சி.சி அணி, சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம், ஒல்ட் கோல்ட்ஸ் அணியும் -

டீ பிரிவில் மானிப்பாய் பரிஷ், ஹீரோஸ் ஹிப்பஸ் விளையாட்டுக் கழகம், ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் பங்கு கொள்ளவிருக்கின்றன.

இந்தப் போட்டிகள்யாவும் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கடந்த வரும் நடைபெற்ற கே.சி.சி.சி வெற்றிக்கிண்ண போட்டியில் யாழ்.பல்கலைக் கழகம் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஏ பிரிவில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியும் -மாலை 1.00 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பி பிரிவில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன.

## தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்—

யாழ். மாவட்ட தாச்சி சங்கம், தமிழீழ விளையாட்டுத் துறை அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டி கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது.

இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் - கைதடி குமாரநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்—

தமிழீழ விளையாட்டுத்துறை, வலிகாம உதைபந்தாட்ட லீக் ஆதரவில் நமது ஈழநாடு ஊடக அனுசணையுடன் சுனாமியால் உயிரிழந்த மாதகல் வாழ் மக்களின் ஞாபகார்த்தமாக மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டத்தில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் 3 மணிக்கு புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகமும் -

4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றீஸ் பி அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# மாவட்ட மட்ட கரப்பந்தாட்டம்: அம்பாறை மாவட்டம் சம்பியன்

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டியின் ஒரு கட்டமாக கரப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த புதன், வியாழக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆண், பெண் இருபாலருக்குமான போட்டிகளாக நடைபெற்றபோது, இரண்டு பிரிவுகளிலும் அம்பாறை மாவட்ட அணி சம்பியனானது.

நேற்றுமுன்தினம் மின்னொளியில் இரவு 8 மணிக்கு ஆரம்பமான பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அம்பாறை மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் மோதின.

இந்த ஆட்டத்தில் அம்பாறை மாவட்ட அணி 25:17, 25:18 என்ற அடிப்படையில் இலகுவாக மன்னார் அணியை வெற்றி கொண்டது.

இதேவேளை, 9 மணிக்கு ஆரம்பமான ஆண்களுக்கான இறுதியாட்டம் 5 சுற்றுக்களைக் கொண்டதாக அமைந்தது. இதில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து அம்பாறை மாவட்ட அணி மோதியது. முதல் சுற்று ஆரம்பமானபோது அம்பாறை மாவட்ட அணியின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது.

முதற் சுற்றை 25:17 என்ற அடிப்படையில் அம்பாறை முன்னிலை வகித்தது. இரண்டாவது சுற்று ஆரம்பமானதும் இரு அணி வீரர்களும் விறுவிறுப்பாக ஆடினர். இரண்டாவது சுற்றை 26:24 என்ற புள்ளி அடிப்படையிலும், மூன்றாவது சுற்றை 25:21 என்ற புள்ளி அடிப்படையிலும் யாழ். மாவட்ட அணி வெற்றிபெற்றது.

இதில் நான்காம், ஐந்தாம் சுற்றுக்களில் அம்பாறை மாவட்ட அணியின் ஆதிக்கம் அதிகமாக இருந்ததால் 25:23, 15:12 என்ற புள்ளி அடிப்படையில் அம்பாறை அணி வெற்றிபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அம்பாறை மாவட்ட அணி, யாழ். மாவட்ட அணியை 3:2 என்ற சுற்றுக்கள் அடிப்படையில் வெற்றிபெற்று மாகாண சம்பியனானது.

அரையிறுதி ஆட்டத்தில் அம்பாறை மாவட்ட அணி - கிளிநொச்சி மாவட்ட அணியை 17:25, 25:08, 25:19, 25:17, என்ற புள்ளி அடிப்படையில் 3:1 என்ற நிலையிலும், அரையிறுதி ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை யாழ். மாவட்ட அணி 25:23, 25:22, 23:25, 25:20 என்ற புள்ளி அடிப்படையில் 3:1 என்ற நிலையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சென்.தோமஸ் உதைபந்தாட்டம்; வதிரி பொமேர்ஸ் அணி வெற்றி!

யாழ்ப்பாணம்—

மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் கரணவாய் மத்திய விளையாட்டுக்கழகமும் பருத்தித்துறை பொமேர்ஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்றன.

ஆரம்பஆட்டத்தில் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் றேஞ்சஸ் விளையாட்டுக்கழகம் மோதவிருந்தபோதும் - மானிப்பாய் றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் குறித்த நேரத்துக்கு விளையாட்டு மைதானத்திற்குச் சமுகம் கொடுக்காமையால் கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றிவழங்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டாவது ஆட்டமாக பருத்தித்துறை பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் மோதியது ஆட்டம் தொடங்கி 21 ஆவது நிமிடத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக வீரர் நிக்சன் ஒரு கோல் அடித்தார். தொடர்ந்து 43 ஆவது நிமிடத்தில் பருத்தித் துறை பொமேர்ஸ் விளையாட்டுக்கழக வீரர் கோபி ஒரு கோல் அடித்தார்.

ஆட்டம் நிறைவுறுவதற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கையில் பொமேர்ஸ் விளையாட்டுக் கழக வீரர் வைகுந்தநாதன் ஒரு கோல் அடித்தார். இதனையடுத்து 1:2 என்ற அடிப்படையில் பொமேர்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

# லீனா கற்றுக்கொண்ட பாடம்






*சிறுவர் அரங்கம்*

துருவன்

## பட்டம் விடுவோம்

பட்டம் வானில் அழகாக
பறந்து செல்லுதே
பாம்பு போல வாலும்
நெளிந்து நெளிந்து ஆடுதே

எட்டு மூலைப் பட்டம் வானை
முட்டப் போகுதே
வட்டமிட்டு வாலுடனே
வலம் வருகுதே..

வாலில்லாத பருந்துப் பட்டம்
வாகாய்ப் பறக்குதே
நூலில் அது ஆகாயத்தில்
அழகாய்ப் பறக்குதே

பாம்புப் பட்டம் ஆகாயத்தில்
பறந்து போகையில்
தேம்பி அழும் குழந்தை கூடப்
பார்த்துச் சிரிக்குதே.

வண்ண வண்ணப் பட்டங்கள்
வானில் பறக்குதே
சின்னஞ் சிறு சிறுவர்களின்
கண்ணைக் கவருதே

பருந்துப் பட்டம் ஆகாயத்தில்
விரைந்து ஏறுதே
அசைந்திடாமல் அந்தரத்தில்
நின்று பறக்குதே.



### அன்புக்குரிய சிறுவர்களே!

தவறு அல்லது பிழை என்றால் என்ன? உங்களால் ஏதாவது இதைப் பற்றிச் சொல்ல முடிகின்றதா?

உங்களுக்குத் தெரிந்த தவறுகள் இரண்டு இருக்கின்றன. நான் சொல்லட்டுமா?

முதலாவது, நீங்கள் பரீட்சையில் விடும் தவறு.

இரண்டாவது, வீட்டில் அல்லது பாடசாலையில் குறும்புகள் செய்து விடும் தவறு. அப்படித்தானே!

சரி இதைவிட இன்னுமொரு தவறு இருக்கின்றது. அதுதான் நாங்கள் பிறருடைய தவறுகளைச் சுட்டிக்காட்டிக் கதைப்பது. இது நாங்கள் தெரியாமல் விடும் தவறு. இது எப்படித் தவறு என்று நீங்கள் கேட்கலாம்.


சிறுவர்களே! முதலில் நாங்கள் எங்களுடைய தவறுகளைத் திருத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு மற்றவர்களுடைய தவறுகளை, அவர்களது மனம் புண்படாதபடி சொல்லித் திருத்தலாம்.

பாசமுடன் சாரு அக்கா

**ஓவியப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும், ஓவியங்களும்.**



சி.தனுஜன்
யாழ்/ மத்திய கல்லூரி
தரம் : 09



ச.பானுப்பிரியா
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
தரம் : 09

இ.மேனன்
யா /தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.
தரம் :- 08



## உங்கள் கைவண்ணம்




ந.சஞ்சீவன்
தரம் - 7
யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி.



# யானையும் கோழியும்

ஒரு நாள் ஒரு சேவல் உணவு தேடி, அங்கும் இங்கும் அலைந்தது. குளக்கரை ஓரமாக யானைகள் குளிப்பதைப் பார்த்தது. அவற்றின் அருகே சென்று "கொக்கரக்கோ" என்று உரக்கக் கூவியது. அதைக் கேட்ட யானை ஒன்று வியப்படைந்து "இது... என்ன கொக்கரக்கோ!" என்று எண்ணியது.



அந்தச் சேவல் தனது கால்களால் மண்ணைக் கிளறியது. அதிலிருந்து சில தானியங்களைப் பொறுக்கியது. அவற்றைக் கொறித்துக்கொண்டே இடையிடையே "கொக்கரக்கோ" என்று கூவியது.

யானை, சேவலின் செயலைச் சிறிது நேரம் கவனித்தது. பின்பு அதனிடம் சேவலே! யாரால் அதிகமாகச் சாப்பிட முடி யும்? உன்னாலா அல்லது என்னாலா? என்று கேட்டது.

உடனே என்னால்தான் என்று பெருமையுடன் பதில் சொன்னது சேவல்.

இப்படி யானையும், சேவலும் விவாதித்துக்கொண்டே இருந்தன. இறுதியில் இரண்டும் போட்டி நடத்துவது என்ற முடிவுக்கு வந்தன. யானை அருகில் இருந்த இலை தழைகளைச் சாப்பிடத் தொடங்கியது. வயிறு முட்டும் வரை சாப்பிட்டது. பின்னர் நித்திரை வரவே நித்திரை கொண்டது.

நித்திரை தெளிந்ததும் யானை கண்ணை விழித்துப் பார்த்தது. சேவல் எதையோ கொத்தித் தின்று கொண்டே இருந்தது. இதனைப் பார்த்த யானை மீண்டும் சாப்பிடத் தொடங்கியது. ஏராளமாகச் சாப்பிட்டது. மறுபடியும் நித்திரை வரவே நித்திரை கொண்டது.

பிறகு பின்னேரம்தான் யானை நித்திரையால் முழித்தது. அப்போதும் தானியங்களைப் பொறுக்குவதில் சேவல் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. கொத்திக் கொத்தி தானியங்களைப் பொறுக்கிக் கொண்டே இடையிடையே "கொக்கரக்கோ"- என்று கூவியது.


அப்பப்பா எவ்வளவு பேராசை பிடித்த கோழி இது! இதைப் போன்ற பேராசை பிடித்த பிராணியை நான் இதுவரை பார்த்ததே இல்லை!- என்று வியப்புடன் சொன்னது யானை.

இதைச் சேவல் கேட்டது. போட்டியில் வெற்றி பெற்றுவிட்ட பெருமையால் சேவல் சந்தோஷப்பட்டது. தன்னை எல்லோரும் புகழ்வார்கள் என்று சேவல் நினைத்தது. உடனே அது படபடவென்று பறந்து சென்று யானையின் முதுகின் மேல் அமர்ந்தது. உடனே யானை ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள். இந்தச் சேவல் என்னைச் சாப்பிட்டு விடும் போல் இருக்கிறதே.

எனக்குப் பயமாக இருக்கிறது. -என்று ஓலமிட்டது.

தனது முதுகை உலுக்கிச் சேவலை உதறிவிட்டு "தலை தப்பியது பெரும் புண்ணியம்" என்று ஓடியது.

யானை ஓடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த சேவல் தனது இறக்கைகளை அடித்துக்கொண்டு "கொக்கரக்கோ நான் யானையைவிட பலசாலி கொக்கரக்கோ" என்று உரக்கக் கூவியது.




ஒரே மூச்சில் பெரும் அளவில் வேகமாகச் சாப்பிட்ட யானை தோற்றது. சிறிது சிறிதாக உண்டு கொண்டேயிருந்த விட்டுயானை நித்திரையான நேரத்தில் உண்பதை நிறுத்திவிட்டு பின்னர் யானை நித்திரை முழிக்கும் நேரத்தில் தொடர்ந்த உண்பது போன்ற பாவனையில் உண்ணத் தொடங்கி மொத்தத்தில் யானையைவிடச் சிறிதளவே உண்ட கோழி தன் சமர்த்தியத்தால் யானையை வென்றது.



## கீழுள்ள கழுத்துக்குரிய தலைகளைக் கண்டுபிடியுங்கள்

ஒரு ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து விடுபடும்




## மூளைக்கு வேலை

ஒரு புதிய சவர்க்காரக் கம்பனி - பத்திரிகைகள் மூலமாக ஒரு விளம்பரம் செய்திருந்தது. அக்கம்பனி சவர்க்காரத்தின் மூன்று மேலுறைகளைக் கொடுத்தால் ஒரு சவர்க்காரம் இலவசமாகத் தருவதாக விளம்பரத்தில் இருந்தது.

உங்களிடம் 27 மேலுறைகள் உள்ளன என வைத்துக் கொள்வோம். அவ்வாறெனில் உங்களால் அந்தக் கம்பனியிடமிருந்து எத்தனை சவர்க்காரங்களை வாங்க முடியும்.

## அறிந்து கொள்ளுங்கள்

1. அவுஸ்ரேலியா நாட்டின் தேசிய சின்னம் எது? - கங்காரு
2. இருண்ட கண்டம் என்று எதனைக் கூறுவர்? - ஆபிரிக்கா
3. மனித உடலில் பதார்த்தங்களைக் கொண்டு செல்ல உதவும் தொகுதி எது? - குருதித்தொகுதி
4. திரவத்தின் அடர்த்தியை அளக்கப் பயன்படும் கருவி எது? - ஹைட்ரோ மீற்றர்
5. இந்தியாவின் நுழைவாயில் எது? - மும்பாய்
6. இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை யார்? - C.W.கன்னங்கரா
7. முதன்முதலாகப் பாலர் பாடசாலையை அறிமுகப்படுத்திய பெண் யார்? - மரியாமொண்டிசிறி அம்மையார்.
8. மிகப்பழைமையான விளையாட்டு எது? - போலோ
9. குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம்? - அவுஸ்திரேலியா
10. வெடிமருந்தைக் கண்டு பிடித்தவர் யார்? - அல்பிரட் நோபல்.

வெ.கிறிஸ்ரீனா டுலக்ஷி
தரம் - 10
யா.உடுவில் மகளிர் கல்லூரி.

## நான் யார்?

எனது பெயர் கஜானா சுந்தரலிங்கம். நான் தரம் 04 இல் கல்வி கற்கின்றேன். எனது பெற்றோரின் பெயர்கள் சுந்தரலிங்கம், இராஜதேவி. எனது பாடசாலையின் பெயர் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம். குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை 07. எனக்கு 03 அண்ணன்களும், ஒரு தங்கையும் உண்டு. எனக்கு எங்கள் பெரியம்மாவை மிகவும் பிடிக்கும். எனது பொழுதுபோக்கு பத்திரிகை வாசித்தல், விளையாட்டு. பிடித்த நண்பிகள் - கார்த்திகா, சுவேனியா, துவாரகா, கலைவாணி. பிடித்த பாடம் ஆங்கிலம். நான் முள்ளானை எனும் சிற்றூரில் வசிக்கிறேன்.

சு.கஜானா
முள்ளானை.

## மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1. 15
2. 7 1ணன்கள்
3. 9911, 9191, 1919, 1199
4. 5 முறை.

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் :- உ.பிரவீணன்
பாடசாலை :- உடையார்கட்டு மகா வித்தியாலயம்.
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள்:- பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல்.

பெயர் :- ஞா.ஞானறொபின்சன்
பாடசாலை :- யா/கலட்டி றோ.க.த.க. ஆண்கள் பாடசாலை.
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள்:- ஓவியம் வரைதல்.

பெயர் :- நா.மேனகா
பாடசாலை :- மல்லாகம் மகா வித்தியாலயம்.
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

பெயர் :- தி.தயாபரன்
பாடசாலை :- யா/கம்பர்மலை அ.த.க. பாடசாலை.
தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள்:- விளையாட்டுத்துறை, கல்வி, சித்திரம் வரைதல்.

பெயர் :- வே.ரயனிதேவி
பாடசாலை :- முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம்.
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள்:- பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர் :- ந.சஞ்சீவன்
பாடசாலை :- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள்:- ஓவியம் வரைதல், கதைப்புத்தகம் வாசித்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## மரத்தில் பூக்காத பூக்கள்

மனிதன் புகழும் பூ - சிறப்பு
காலையில் வரும் பூ - விடிப்பு
கோபத்தில் வரும் பூ - வெறுப்பு
கையிலே அணியும் பூ - காப்பு
மனிதனுக்கு இருக்க வேண்டிய பூ - பண்பு.

மகேந்திரன் சிவகௌரி,
தரம் 07
யா/ பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.

# விளையாடலாம்! வரையலாம்

கரன் கையில் என்ன வைத்திருக்கிறான்? புள்ளிகளை இணைத்துக் கண்டு பிடியுங்கள்.




## வழிகாட்டுங்கள்

நிலத்தில் உள்ள சின்ன மாம்பழம் மரத்திலுள்ள பெரிய மாம்பழத்தைச் சென்றடைய வழிகாட்டுங்கள்.



# நாடுவிட்டு நாடு பறக்கும் வண்ணத்துப் பூச்சிகள்


வண்ணத்துப்பூச்சிகள் பல இடங்களுக்கும் பறந்து செல்லக் கூடியவை. இவை பறந்து செல்லும் போது, தாங்கள் செல்லும் திசையை நன்கு அறிந்து கொள்ளும் ஆற்றல் உடையவை.

இதன் வேகம் மணிக்கு 10 கிலோ மீற்றர் ஆகும். சில வகையான வண்ணத்துப்பூச்சிகள் முட்டையிடுவதற்காக கிட்டத்தட்ட 2 ஆயிரம் கிலோ மீற்றர் வரை பறந்து சென்று முட்டையிடுகின்றன.



இமயமலை அடிவாரத்தில் வாழும் சில வகையான வண்ணத்துப்பூச்சிகள் அங்கு கோடைகாலம் ஏற்படும் போது, அங்கிருந்து புறப்பட்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கின்றன.

இதில் வார்ஜ்கேபேஜ் ஒனட் என்னும் இனத்தைச் சேர்ந்த வண்ணத்துப் பூச்சிகள் இவ்வாறு அடிக்கடி ஐரோப்பிய நாடுகளுக்குப் பறந்து செல்கின்றன. ஸ்வாலோ டெயில் என்னும் இனத்தைச் சேர்ந்த வண்ணத்துப்பூச்சிகள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இவ்வாறு பறந்து வருகின்றன. ஒரேஞ் நிற வண்ணத்துப்பூச்சிகள் வேகமாகப் பறப்பதில்லை. வண்ணத்துப்பூச்சிகள் முட்டையிடும் போது ஒரே இடத்தில் முட்டையிடாமல், அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பரவலாக முட்டையிட்டு வைக்கும்.



# அபூர்வ குரங்குகள்



சிறுசிறு விலங்கினங்களும் பறவையினங்களும் மனிதர்களாலும், விலங்குகளாலும் அழிந்து வருகின்றன. ஆனால் இந்தச் செய்திக்கு மாறாக, இனிக்கும் செய்தியாக, பிரேசில் நாட்டில் அமேசன் நதி ஓடும் மலைக் காடுகளில் புதிய குரங்கினம் ஒன்றை இயற்கையறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதற்கு, இளவரசர் பெர்ஹார்ட்ஸ் குரங்கு அல்லது காலிசிபஸ் பெர்ன்ஹார்ட் என்று பெயர் சூட்டியுள்ளனர். ஆணும், பெண்ணுமாக ஒரு சோடி குரங்குகளை இயற்கை அறிஞர்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள். சரி. இந்தக் குரங்கினத்திற்கு இளவரசர் என்று பெயர் சூட்டியது ஏன் தெரியுமா?

நெதர்லாந்து நாட்டின் இளவரசர் பெர்ன்ஹார்ட். இவர் இயற்கைச் சூழ்நிலை, விலங்குகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்டவர். அதனால் இந்த குரங்கினத்திற்கு பெர்ன்ஹார்ட் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.



அடுத்து இன்னொரு ஆபூர்வ குரங்கு இனம் பற்றிய செய்தியைப் படியுங்கள்.

தாயின் முதுகில் ஓய்யாரமாகச் சவாரி செய் யும் இந்த லெமூர் குட்டிக்கு வயது 2 1/2 மாதம் தான். லெமூர் குரங்குகள், ஏனைய குரங்கு இனங்கள் மாதிரியே மரத்தில் வாழும் விலங்கு.

வாலில் வளை யம் போன்ற அமைப்புள்ள இந்த லெமூர் குரங்கினம் - மடகஸ்கார் தீவில் பெருமளவு இருந்தன. ஆனால், அவை வாழும் சூழ்நிலை அழிக்கப்பட்டதால், இவற்றின் இனம் வெகுவாகக் குறைந்து விட்டது.

இவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காக இங்கிலாந்தில் வின்செஸ்டரில் உள்ள மார்வெல் மிருகக் காட்சி சாலையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*
*திருக்குறள்*

# நமது நோக்கு

## போருக்குள் தள்ளும் அரசு!

விடுதலைப் புலிகளால் நேற்றுமுன்தினம் இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்டிருக்கும் இரண்டு வார காலக் கெடு - போர்நிறுத்தம் மிகவும் மோசமானதொரு கட்டத்தில் இருக்கின்றதென்ற உண்மையை உணர்த்தியிருக்கிறது.

வன்னியிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் போராளிகளின் பாதுகாப்பு - கேள்விக்குறியாக்கப்பட்ட நிலையும் - மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடரும் போராளிகளின் படுகொலைகளும் தான் புலிகள் இந்த முடிவை எடுப்பதற்குக் காரணமாயிருக்கின்றன.

மூன்று ஆண்டுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த போர்நிறுத்த உடன்பாடு - பலமுறை இத்தகைய நெருக்கடிகளை எதிர் கொண்டிருப்பினும், இப்போது எழுந்திருக்கின்ற சூழ்நிலை மிகவும் மோசமானதாகவே தென்படுகிறது.

புலிகள் - போர்நிறுத்த காலத்தில் பல தளபதிகளையும், போராளிகளையும் படையினரின் வஞ்சனையான தாக்குதல்களுக்கு பலிகொடுத்திருக்கின்றனர்.

இப்போது கருணாவுடன் கைகோர்த்துக் கொண்டு - இராணுவப் புலனாய்வுத்துறை, புலிகளுக்கு எதிராக நடத்துகின்ற தாக்குதல்கள் அவர்களை மிகவும் ஆத்திரம்கொள்ளச் செய்திருக்கின்றது.

தமது தளபதிகளுக்கு போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்துதருமாறு, அரச சமாதான செயலகத்திடம் புலிகள் கோரியபோது - அது இழுத்தடிக்கப்பட்டு மறுக்கப்பட்டபோதே புலிகள் - சுயபாதுகாப்புடன் பயணத்தைத் தொடர்வது பற்றிய ஆலோசனைகளை நடத்தியிருந்தனர்.

இப்போது வெலிக்கந்த தாக்குதலை அடுத்து - பாதுகாப்பான பயணஒழுங்கு செய்துதராவிடின் போர்க் காலத்தில் பயணங்களை எவ்வாறு மேற்கொண்டனரோ அதுபோலவே பயணத்தை தொடர்வது என்ற முடிவுக்கு புலிகள் வந்திருக்கின்றனர்.

இதற்கான அரசின் முடிவுக்கே இரண்டுவார கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஒரு வருடகாலமாக கிழக்கில் புலிகளின் முக்கியஸ்தர்களை இலக்குவைத்து - இராணுவ மற்றும் ஆயுதக்குழுக்கள் நடத்திவரும் தாக்குதல்கள் தான் அவர்கள் இந்த முடிவை எடுக்கும் நிலைக்குக் கொண்டுசென்றிருக்கிறது.

கிழக்கில் புலிகளின் செயற்பாடுகளை முற்றாக முடக்கிவிடும் திட்டத்துடன் இராணுவ புலனாய்வுத் துறை நகர்வுகளை முன்னெடுத்த சூழலில், எடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தீர்மானம் மிகவும் இறுக்கமானதாகவே இருக்கிறது.

புலிகளின் இந்தக் காலக்கெடு உதாசீனம் செய்யப்பட்டால் - நிச்சயம் சண்டை என்ற சூழல் தோன்றவுள்ளது. ஏனெனில், சண்டைக் காலத்தில் புலிகள் கடல்வழியாகவும், தரைவழியாகவும் ஆயுதப் பாதுகாப்புடன் பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

அவ்வாறனதொரு சூழலில் புலிகளை, படையினர் தடுக்க முற்பட்டால் நிச்சயம் சண்டை வெடிக்கும். போர்நிறுத்த உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் 14 நாட்கள் கால அவகாசமாகக் கூட இதனை எடுத்துக்கொள்ளலாம் எனப் புலிகள் கூறியிருக்கின்றனர்.

இவையெல்லாம் இன்னொரு போருக்கான முழக்கங்களாகவே தென்படுகின்றன. மீண்டும் போர் வெடிக்குமா இல்லையா என்பதை எதிர்வுகூறிக்கொண்டிருப்பதைவிட - இத்தகையதொரு நிலையை நோக்கிப் புலிகள் தள்ளப்பட யார் காரணம் எனப் பார்ப்பதே பொருத்தம்.

போர்நிறுத்த உடன்பாட்டின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கமைய தமது போராளிகளின் பாதுகாப்பான பயணத்துக்கு ஒழுங்குசெய்து தருமாறுதானே புலிகள் கேட்டிருக்கின்றனர்.


தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அத்தகையதொரு பாதுகாப்பான நிலையை புலிகளுக்கு ஏற்படுத்திக்கொடுக்க முடியாதென அரசோ அல்லது படைத்தரப்போ கருதினால் அதை அவர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவேண்டும்.

இல்லையெனில், புலிகளை ஆயுதங்களுடன் செல்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குவதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

ஆனால், இப்போதுள்ள சூழலில் இராணுவத்தரப்பு பாதுகாப்பு உத்தரவாதம் கொடுக்கமுடியுமா என்பது கேள்விக்குரியதாயினும் - புலிகளை ஆயுதங்களுடன் செல்ல அது அனுமதிக்காது.

எனவே, யுத்தத்துக்கான நாட்கள் எண்ணப்படுகின்றன என்றே இப்போது கருதவேண்டியுள்ளது. இன்னொரு யுத்தம் ஏற்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பும் அரசாங்கத்தை மட்டுமே சார்ந்திருக்கிறது.

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# நாய் வாலை நிமிர்த்த முடியாது ஜே.வி.பியையும் மாற்ற முடியாது

நாய் வாலை எப்படி நிமிர்த்தமுடியாதோ அதைப்போல் தான் ஜே.வி.பியின் குணத்தையும் மாற்றமுடியாது என்று சொன்னபடி வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன நாயோடும் ஜே.வி.பியோடும் வருகிறீர், விஷயம் என்னவென்றேன்.

நாங்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டோம் என்று பெரிதாகப் பேசிக்கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு திரிகிறார்கள் இந்த ஜே.வி.பியினர். இருந்தாலும் அவர்களை அறியாமலே தமது உண்மைச் சொரூபத்தை வெளிக்காட்டி விடுகிறார்கள் என்றார் பரமசிவம்.

அவர்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டது மட்டுமல்ல ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்டமக்கள் பிரதிநிதிகளல்லாத விடுதலைப் புலிகளுடன் எந்தவிதத் தொடர்புமற்று அரசாங்கம் வைத்துக்கொள்ளக் கூடாது என்றுதானே பொதுக்கட்டமைப்பைத் தாங்கள் எதிர்ப்பதாகவும் சொல்லித்திரிந்தார்களே. அவர்கள்தானே இப்பொழுது ஜனநாயகத்தின் காவலர்கள் என்று சங்கரியார் போலவும் காட்டிக்கொள்கிறார்களே என்றேன்.

ஜனநாயகம் என்று எவரும் பேசிக்கொள்ளலாம். ஜனநாயக வாதிகளாக நடித்தும் கொள்ளலாம். எல்லோருமே இப்பொழுது ஜனநாயகம் பற்றியே பேசுகிறார்கள். ஜனநாயகம் என்று எல்லோருமே பேசும்பொழுது மக்களுக்கே ஜனநாயகம் என்றால் என்ன என்பதில் குழப்பம் ஏற்பட்டு விடுகிறது என்றார் பரமசிவம்.

இலங்கையில் எல்லோருமே ஜனநாயகம் பற்றி ஆண்டாண்டு காலமாகப் பேசிக்கொண்டு வருகிறார்கள். பண்டாரநாயக்கா தலைமையில் எம்.ஈ.பி என்ற மக்கள் ஐக்கிய முன்னணி 1956 ஆம் ஆண்டில் ஜனநாயக முறையில் மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அதிகாரத்துத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டது. சிங்களத்தை இருபத்தி நான்கு மணிநேரத்தில் அரியணையில் ஏற்றுவதாக பண்டாரநாயக்கா வாக்குறுதியளித்துத் தேர்தலில் போட்டியிட்டதால் சிங்களப் பெரும்பான்மை மக்கள் அவரை ஆட்சிக்குத் தெரிவு செய்தார்கள். இதேசமயம் இதே தேர்தலில் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்க்கவும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கக் கோரியும் தமிழ் மக்கள் சுயாட்சியுடன் வாழ்வதற்குச் சமஷ்டி ஆட்சி அமைக்கவும் கோரிப் போட்டியிட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஆனால் தமிழர் தாயகத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம்கள் உள்ளிட்ட தமிழ்பேசும் பிரதிநிதிகள் ஒட்டுமொத்தமாக எதிர்த்தபோதும் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இருதரப்பிலும் ஜனநாயக முறையில் தான் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்தார்கள் என்றேன்.

ஜனநாயக முறையில்தான் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதுவும் ஜனநாயகம்தான் பெரும்பான்மை ஜனநாயகம். இதைத்தான் இப்பொழுது ஜே.வி.பியும், புத்த பிக்குகளின் கட்சிகளும் தமிழ்மக்கள் மீது திணிப்பதற்குக் கூத்தாடுகின்றன. இதுமட்டுமல்ல ஜே.வி.பி ஜனநாயகம் பேசிக்கொண்டு விடுதலைப் புலிகள் ஜனநாயகத்தை மதிக்கவில்லை என்று குற்றம் சுமத்துகிறது. இதேசமயம் அவர்களின் கூற்றுப்படி ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டிருந்த அரசுக்கு எதிராக அரசாங்கத்தின் ஆயுதப்படைகளைக் கிளர்ந்தெழும்படி ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தூண்டிவிடுகிறார். இது பெரும் இராஜத் துரோகம். இதை ஜனாதிபதி சந்திரிகாவும் சரி, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சரி ஏன் கவனத்தில் எடுக்கவில்லையென்று தெரியவில்லை. இதுமட்டுமல்ல ஆட்சி அதிகாரத்திலுள்ள ஒரு படைத்தளபதி உத்தரவிடுவது போல ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க முப்படைகளுக்கும் கொழும்பு நகரசபைமைதானத்தில் நடந்த ஜே.வி.பியின் மாநாட்டில் பேசுகையில் உத்தரவிட்டிருக்கிறார். 'நாட்டின் பாதுகாப்பு தலையில்லாத முண்டமாக்கப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு மூலம் புலிகள் போருக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். ஆகையால் முப்படைகளும் போருக்குத் தயார்படுத்தவேண்டும். உயர்மட்ட உத்தரவுகளை முப்படை யினர் ஏற்கக் கூடாது. அதனை எதிர்க்க வேண்டும். நாம் இருக்கிறோம் உங்களை நாங்கள் மாலை சூட்டி வரவேற்கக் காத்திருக்கிறோம். இராணுவத்திலிருந்து உங்களை வெளியேற்றினால் உங்களை வரவேற்கக் காத்திருக்கிறோம்' என்று ஜே.வி.பி தலைவர் பேசியிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

பார்த்தீரா இப்பொழுது ஆயுதப் படைகளிலுள்ளவர்களை அதிலிருந்து வெளியேறி வரும்படி ஜே.வி.பி அழைப்புவிடுத்து அவர்களைச் சேர்த்து ஆட்சிக்கெதிராகப் புதிய கூட்டமைப்பு அமைக்கத் திட்டமிடுவதாகத் தெரியவருகிறது. உண்மையில் புலிகளைச் சாட்டி நாட்டில் ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்களையும் தூண்டிவிட்டு மீண்டும் ஒரு ஆயுதக்கிளர்ச்சிக்கு ஜே.வி.பி வழிகோலுவதாகத்தான் தெரிகிறது என்றேன்.

1971 ஆம் ஆண்டிலும் 1989 ஆம் ஆண்டிலும் ஆயுதக் கிளர்ச்சிகள் தோல்வியடைந்து விட்டன. சந்திரிகா அம்மையாருடன் சேர்ந்து ஜனநாயகவாதிகளாக மாறி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் போட்ட திட்டமும் வெற்றியளிக்கவில்லை. இனி புலிகளைச் சாட்டி ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்களையும் இணைத்து ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு எத்தனிப்பதாகத்தான் தோன்றுகிறது என்றேன்.

நாய்வாலை நிமிர்த்தமுடியாது. ஜே.வி.பியின் குணத்தையும் மாற்ற முடியாது. இப்பொழுது புலிகளைச் சாட்டியே ஒவ்வொருவரும் தமக்கேற்றபடி இலாபம் தேடிக்கொள்ள முனைகிறார்கள். ஜே.வி.பி தனது பழைய போக்கில் ஆதாயம் தேடுகிறது. அதன் குணத்தை மாற்ற முடியாது. சந்திரிகா அம்மையாரும் ரணிலும் எச்சரிக்கையாக இருந்தால் நல்லது. தப்பிக் கொள்ளலாம்! என்றபடியெழுந்தார் பரமசிவம்.

## இவர்கள் கண்ணுக்கு இது புலப்படாதா?

**வாசகர்நோக்கு**

வேம்பிராய் சந்தியிலிருந்து வரணி நோக்கிச் செல்லும் வேம்பிராய் - வரணி வீதியானது பல வருடங்களாகத் திருத்தப்படாமல் உள்ளது. இந்த வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. அன்றாடம் இந்த வீதியூடாக ஏராளமான மக்கள் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். மந்துவில் கிராமத்தில் பெரும்பாலும் விவசாய மக்களே வாழ்ந்து வருகின்றனர். எனவே, அதிகாலையில் தமது வியாபாரப் பொருட்களை எடுத்துச் செல்வதில் படாதபாடு படுகின்றனர். இந்த வீதியூடாக மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போது வீதியில் நீர் தேங்கி நிற்கும் காலத்தில் விழுந்து மிகவும் அசிங்கமாக காட்சியளிக்கும் உடையுடன் பாடசாலை செல்ல முடியாமல் மீண்டும் வீடு நோக்கிச் செல்வதைக் காணமுடிகிறது. வைத்தியசாலைக்கு நோயாளிகளைக் கொண்டு செல்லும் போது, உதாரணமாக கர்ப்பவதிகள் இந்த வீதிகளைக் கடந்து கனகம்புளியடி வீதியில் ஏறுவதற்கு முன் பிரசவித்து விடுமளவுக்கு வீதி மிகவும் பாழடைந் துள்ளது. இதனால் அநியாய சாவுகள் ஏற்பட 90 வீத வாய்ப்புள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் அதிகாரிகள் ஏழைமக்கள் வாழும் இந்த வீதியைத் திருத்த கவனமெடுப்பார்களா? சில நகர்ப்புற வீதிகளில் ஆங்காங்கே காணப்படும் தார் கிளம்பிய பகுதிகளை திருத்திக் கொண்டிருக்கும் இவர்கள் கண்களுக்கு இந்த வேம்பிராய் - வரணி வீதி புலப்பட மாட்டாதா?

**பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில்**
**யருணா - தேவபாலன்**
மந்துவில் மேற்கு


மாரீசன்

# நீர் பிரச்சினையால் வெகுவாகப் பாதிக்கப்படும் குடாநாட்டு மக்கள்

**குடாநாட்டின் பல பகுதிகளிலும் குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரியவருகிறது. குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது, இது ஒரு ஜீவாதாரப் பிரச்சினையாகக் கருதப்பட்டு விவாதிக்கப்படும். ஆனால் ,பருவகால மழை தொடங்கியதும் இது ஒரு மறக்கப்பட்ட விடயமாகிவிடும்.**

1967ஆம் ஆண்டளவில் குடாநாட்டுக்கு வருகை தந்து, குடாநாட்டின் நீர்வளம் பற்றி ஆய்வு நடத்திய இஸ்ரேலிய நிபுணர்குழு வெளியிட்ட ஓர் அறிக்கையில் ‘இருபத்தைந்து வருடங்களில் யாழ். குடாநாடு பாலைவனமாகும்’ என ஓர் அதிர்ச்சி தரும் செய்தியை விடுத்துச் சென்றனர். ஆயினும் அன்றிலிருந்து இன்றுவரை யாரும் இந்தப் பிரச்சினை பற்றி அக்கறையெடுத்துச் செயற்பட்டதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு வருடமும் கோடை காலம் ஆரம்பமானவுடன், இந்தக் குடிநீர்ப்பிரச்சினை தலை தூக்க ஆரம்பித்துவிடும். ஆயினும், மக்களை வழிநடத்தும் தலைவர்களோ அன்றி, நாடாளுமன்ற உறுப்பினர்களோ இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான நடவடிக்கை எடுக்க முயன்றதாகத் தெரியவில்லை.



தற்போது மீண்டும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரியவருகிறது. குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் போது, இது ஒரு ஜீவாதாரப் பிரச்சினையாகக் கருதப்பட்டு விவாதிக்கப்படும். ஆனால், பருவகாலமழை தொடங்கியதும் இது ஒரு மறக்கப்பட்ட விடயமாகிவிடும்.

இப்போது வன்னியிலுள்ள இரணைமடுக்குளத்திலிருந்து குடாநாட்டுக்கு நன்னீர் வழங்க முடியுமாவென ஒரு ஆய்வு நடைபெறவிருப்பதாக அறியக்கிடக்கிறது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திலிருந்து, இந்தவருடம் ஜனவரிமாதம் வரை அதிக அளவு மழைநீரைப் பெறமுடிந்தது. பருவகாலத்தில் எவ்வளவு அதிகமாக மழைபெய்தாலும், நம்மவர்கள் எதிர்காலத்துக்குரிய நிலத்தடி நீரைச் சேமிப்பதில் எள்ளளவும் அக்கறை எடுப்பதில்லை. இதனாலேயே கோடைகாலத்தில் நன்னீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

இப்போது வன்னியிலுள்ள இரணைமடுக் குளத்திலிருந்து குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க முடியுமா? என்பது ஆய்வுக்குரிய விடயமாகவுள்ளது. இரணைமடுக்குளம் வன்னியிலுள்ள பல ஆயிரம் ஏக்கர் நெற் செய்கைக்கு நீர் வழங்கும் தாய்க்குளமாகும். இதனால் பெறப்படும் நெல்லின் மூலமே வன்னி குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அரிசியைப் பெறக்கூடியதாகவுள்ளது. இரணைமடுக்குளத்து நீரைப் பாசனத் தேவைகளுக்கு மட்டுமன்றி, வேறு தேவைகளுக்கும் பயன்படுத்த முற்படின், எதிர்காலத்தில் நெற்செய்கைக்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்படலாம். இது குறித்து அதனுடன் சம்பந்தப்பட்ட நீர்வழங்குநர்களும், பொறியியலாளர்களுமே தீர்மானமெடுக்கமுடியும்.

இரணைமடுக்குளத்திலிருந்து குடாநாட்டுக்குக் குடிநீர் வழங்குவதென்பது அவ்வளவு சுலபமான காரியமென எண்ணிவிட முடியாது. ஏனெனில், கடும்வரட்சி நிலவும் காலங்களில் குடிநீர்ப் பிரச்சினை ஒரு பெரும்பிரச்சினையாக மாறிவருவதை நாம் அறிவோம்.

வன்னியில் காலபோக நெற்செய்கை மாரி மழையை நம்பியும், சிறு போகம் சேகரிக்கப்பட்ட நீரை நம்பியுமே மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இரண்டு போகங்களிலும் நெற்செய்கைக்குப் போதிய நீர் தேவை. இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய நீரைவிட, மேலதிகமாக நீரைச்சேமித்து வைத்தால் மாத்திரமே குடாநாட்டுக்கு நீர்வழங்குவது பற்றிச் சிந்திக்க முடியும்.

குளங்களில் சேகரிக்கப்படும் நீர் - குறைந்தது ஆறுமாதங்களாவது பாதுகாக்கப்பட வேண்டும். அப்போது தான் வன்னிநிலமெங்கணும் நிலத்தடி நீர் சேமிக்கப்பட்டு, ஈரப்பதன் குன்றாத நிலையில் வரண்டகாலங்களில் கிணறுகளின் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படக் கூடியதாக அமையும். குடாநாட்டுக்கு மிக நீண்டதூரம் நீர்க்குழாய்கள் மூலம் நீர் செல்ல வேண்டியிருப்ப’தால், இரணைமடுக்குளத்தில் அதிக அளவான நீர் சேமிக்கப்படக் கூடியதாக குளம் நன்கு ஆழமாக்கப்படல் வேண்டும்.

எனவே வன்னியிலென்றாலும் சரி, குடாநாட்டிலென்றாலும்சரி, வரட்சியால் பாதிக்கப்படும் மக்கள் எதிர்காலத்தில் பருவகால மழை ஆரம்பிக்கும் போது, அந்த நீரைக் கண்டபடி உபயோகமற்றுப் போகாதவாறு பக்குவமாகச் சேமித்துப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகள் மாரிகாலம் ஆரம்பமாவதற்கு முன்னரே செயற்படுத்தப்பட்டுத் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

வருமானங்களைப் பலவகையிலும் ஈட்டும் போது, அந்தப் பணத்தை தேவையான போது எடுப்பது போன்றே மாரிவழங்கும் போது நிலத்தடி நீரைத் தாராளமாகப் போதியளவு சேமித்து வைப்பின், வரட்சிக் காலத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். ‘பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்’ எனும் மூதுரை இதை விளக்கவில்லையா?


இந்த வகையில் ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள கிராமமுன்னேற்றச் சங்க நிர்வாகிகள் முன்னணியில் நின்று செயற்பட வேண்டும். இவர்கள் தங்கள் தங்கள் கிராமத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் அறிவுரைகளை வழங்கி, அவர்கள் செயற்பட உதவ வேண்டும்.

இரணைமடுக்குளத்திலிருந்து குடாநாட்டுக்குக் குடிநீர் விநியோகிக்கும் திட்டம் சாத்தியப்படும் பட்சத்திலேயே அதைச் செயற்படுத்த முடியும். இந்தத் திட்டம் பரிசீலனையில் இருப்பதால், குடாநாட்டு மக்கள் இந்தத் திட்டத்தை நம்பியிராமல், அடுத்து வரும் பருவகால மழைநீரைச் சேமிப்பதன் மூலம், நிலத்தடி நீர்வளத்தை அதிகரித்துச் செய்வதற்குரிய அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிப்பதே சாலச்சிறந்த செயலாகும்.

கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறை மிகமோசமான அளவில் குடாநாட்டு மக்களைப் பாதிக்கின்ற பொழுதும், மழைநீரைச் சேமிப்பதில் மக்கள் அக்கறையற்றிருப்பது மிகுந்த விசனத்துக்குரிய விடயமாகும்.

மாரி மழை பொழியும் போது, அளவுக்கதிகமான நீர் கடலோடு கலக்கிறதென்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். கடலைச் சென்றடையும் மழை நீரைத் தடுத்து நிறுத்தி, நிலத்துள் செறிய வைப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதே குடாநாட்டு மக்களுக்கு மிக்க நன்மை பயக்கக் கூடிய காரியமாகும்.

எனவே பின்வரும் நடைமுறைகளைக் கையாண்டு, ஒவ்வொரு கிராமத்திலும் முன்னேற்றம் கருதிச் செயற்படும் அமைப்புகள் மழைநீரைச்சேமிக்கும் முயற்சியில் ஈடுபடுவதன் மூலம், வரண்ட காலத்துக்குரிய நீரைச் சேமித்து வைக்க முடியும்.



1. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நீர்க்காப்புக் குழுவொன்று உருவாக்கப்படல் வேண்டும்.

2. இந்தக் குழுவினர் நீரைச் சேமிப்பதன் அவசியத்தைக் கிராமத்திலுள்ள மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும்.

3. வீட்டுக் காணியின் எல்லைகளின் வரம்புகளை அமைத்து, ஓரளவு நீரை வளவுக்குள் தேக்குவதற்கு வகை செய்ய வேண்டும்.

4. ஒவ்வொரு கிராமத்தின் மத்தியிலும் நிலப்பரப்பில் தரிசு நிலங்களுக்கு ஏற்றவாறு, ஆகக் குறைந்தது கால், கால் ஏக்கர் (அதாவது நாலு பரப்புக்) காணியிலாவது ஒரு சிறிய குளம் அமைக்க முடியுமாயின், நிலத்தடி நீரைச் சேமிப்பதற்கு அது உதவியாக இருக்கும். இப்படிப்பட்ட, முன்னேரே அமைக்கப்பட்டுள்ள குளங்கள் பல கிராமங்களில் உண்டு. அந்தக் குளங்களை மக்கள் சிரமதானம்மூலமோ, அன்றேல் நலன்புரி ஸ்தாபனங்கள் மூலமோ ஆழமாக்கியமைப்பின் அதிக அளவிலான நீரைச் சேமித்து தேக்கி வைக்க முடியும்.

5. குடாநாட்டில் ஒரு கிராமச் சபைக்குட்பட்ட பிரதேசங்களில் ஒருஏக்கர் நிலப்பரப்பிலாவது ஒரு குளம் அமைக்கப்பட்டு, ஆழமாக்கப்படல் வேண்டும்.

6. பெரிய வயற்பிரதேசங்கள் அல்லது தோட்டப் பிரதேசங்களில் ஏற்கனவேயுள்ள குளங்களை அகலமாக்க முடியாவிடினும், அவற்றை இயன்றளவு ஆழமாக்கி நீரின் கொள்ளவைக் கூட்டலாம்.

7. பொன்னாலையிலிருந்து தொண்டமானாறு வரை செல்லும் கடற்கரையோர வீதிக்குத் தெற்குப் புறமாக பற்பல தரிசு நிலங்கள், சிறிய பற்றைக்காடுகள் காணப்படுகின்றன. இந்த இடங்களில் கடலுக்கு வெள்ள மோடிப் பாயும் மதகுகள் உள்ள பகுதிகளில் 15 அடி அகலமான, 6 அடி ஆழமான நீர்தேங்கும் வடிகால்களை அமைத்து, நீரைத் தேங்கச் செய்து, மேலதிக நீரைக் கடலில் பாய விடலாம். இதன் மூலம் நிலத்தடி நீர் அதிகரிக்க அதிக வாய்ப்புண்டு. அத்துடன் தோட்டங்கள், வயல்கள் என்பன செழுமை பெற்று, செய்பயிர்களும் நல்ல பலனை அளிக்கும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள்-குடாநாட்டு மக்களுக்குச் சுமையாகத் தென்படலாம். ஆயினும், இக்கட்டான சூழ்நிலையில் நீரின் தேவை உணரப்பட்டுக் கொண்டிருக்கும் போது, இந்தக் கருமங்கள் மேற்கொள்ளப்படுதல் மிகமிக அவசியமாகும்.

**கோடை காலத்தில் குடிநீர் பற்றாக்குறை மிகமோசமான அளவில் குடாநாட்டு மக்களைப் பாதிக்கின்ற பொழுதும், மழைநீரைச் சேமிப்பதில் மக்கள் அக்கறையற்றிருப்பது மிகுந்த விசனத்துக்குரிய விடயமாகும்.மாரி மழை பொழியும் போது, அளவுக்கதிகமான நீர் கடலோடு கலக்கிறதென்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். கடலைச் சென்றடையும் மழை நீரைத் தடுத்து நிறுத்தி, நிலத்துள் செறிய வைப்பதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து,அவற்றை நடை முறைப் படுத்துவதே குடாநாட்டு மக்களுக்கு மிக்க நன்மை பயக்கக் கூடிய காரியமாகும்.**

இரணைமடுக்குள நீரைக் குடாநாட்டுக்கு விநியோகிப்பதென்பது - உடனடியாகச் சாத்தியப்படக் கூடியதொன்றல்ல. இரணைமடுக் குளத்து நீரை நம்பி மேற்கொள்ளப்பட்ட ஆயிரம் ஏக்கர் வயல்நிலம் - நீர்ப்பற்றாக் குறையால் அழிந்து போனமையும் கவனத்துக்கு அப்பாற்பட்டது.

மிகவும் வரட்சியான காலப் பகுதியிலேயே நெல்லுக்கும், குடிநீருக்கும் நீர் தேவைப்படுகிறது. ஒரே நேரத்தில் இரு கருமங்களையும் மேற்கொள்ள வேண்டுமானால், வன்னியில் இரணைமடுக்குளத்தை அண்டியுள்ள சிறிய குளங்கள் யாவும் ஒன்றில் அகலமாக்கப்பட வேண்டும். அன்றேல் ஆழமாக்கப்பட வேண்டும்.

அத்துடன் இரணைமடுக் குளமும் புனரமைக்கப்பட்டு ஆழமாக்கப்பட வேண்டும். இதனால் குடாநாட்டு மக்கள் மட்டுமல்ல, வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள விவசாயிகளும் நன்மையடைவர்.

காலபோக மாரி மழை ஆரம்பமாவதற்கு முன்பு - நீரைச் சேமிக்கும் விடயத்தில் அனைத்து மக்களும், அமைப்புகளும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

# இசைஞானியால் உருவாக்கப்பட்ட திருவாசகம் இறுவெட்டு வெளியீடு

சென்னை

தமிழ்த்திரை இசை அமைப்பாளர் இளையராஜா, 10ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கியமான திருவாசகத்தின் சில பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார்.

திருவாசகம் சிம்பொனி ஒரட்டோரியோ என்ற பெயரில் இது இசை இறுவெட்டாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இசை இறுவெட்டை சென்னை சங்கீத வித்வத் சபாவில் வியாழக்கிழமை இரவு இந்திய அரசின் தகவல் மற்றும் கலாசாரத்துறை அமைச்சர் ஜெய்பால் ரெட்டி வெளியிட இசைக்கலைஞர் பாலமுரளி கிருஸ்ணா பெற்றுக்கொண்டார்.

நிகழ்வின் தொடக்கத்தில் பேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், ஜகத்கஸ்பார் அடிகளார், வின்செண்ட் செல்லத்துரை, ஆனந்தம் போன்ற கிறிஸ்தவர்களால் நடத்தப்படுகிற தமிழ் மையத்தின் முயற்சியில் இளையராஜாவின் உழைப்பில் தமிழ் இலக்கியமான திருவாசகம் இறுவெட்டு வெளியிடப்படுவது மதச்சார்பின்மை ஆன்மீகம் என்ற சொல்லாடலுக்குப் பொருத்தமானது என்றார்.

இளையராஜாவின் 40 ஆண்டு கால உற்ற தோழரும் இயக்குநருமான பாரதிராஜா தனது உரையில்,

காற்சட்டை நாட்களில் தூண்களுக்கு நடுவில் கம்பியை கட்டிக்கொண்டு அதில் இசையை உருவாக்கி கற்றுக்கொண்டவன் என் இளையராஜா. அவன் எங்கும் எதையும் படிக்கவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக எங்கள் மண்ணில் இருந்த இசை அவனுக்குள் வெளிப்பட்டு இருக்கிறது.

வைகை நதிக்கரையும், மேற்கு தொடர்ச்சி மலையில் தவழுகிற மேக முகடுகளும், புழுதிக்காட்டு புயல்களுமே இந்த இசையை இளையராஜாவுக்குள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. நான் வேறு இளையராஜா வேறு அல்ல. தமிழ்நாட்டை கும்பினியார் ஆண்டதாக வரலாறு. இன்று ஒரு கறுப்புத் தமிழின் இசைக்கு அந்தக் கும்பினியார்கள் கூட நின்று இசை அமைப்பது ஒரு சரித்திர நிகழ்வு என்று உணர்வு பூர்வமாகப் பேசியதுடன், தன் சிறுவயது சிநேகங்களை, உள்மனதின் வெளிப்பாடாக வெளிப்படுத்தினார்.

நடிகர் ரஜனிகாந் பேசுகையில், இளையராஜாவின் இந்த இசை இறுவெட்டு தனக்குள் ஆன்மீக அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்றார்.

இசை இறுவெட்டு, ஆன்மீகம் கலந்த ஒரு நிகழ்ச்சியில் இவர் என்ன பேசப்போகிறார் என்ற ஆவலை உருவாக்கி வைத்தவர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயளலாளர் வைகோ. ஆனால், கேட்டார் பிணிக்கும் இலக்கிய சொற்பொழிவை அவர் ஆற்றியது கண்டு பார்வையாளர்கள், மேடையில் இருந்த பங்கேற்பாளர்கள் என அனைவருமே திகைத்து மகிழ்ந்தனர்.

உலகெங்கும் இன்று இசைக்கப்படுகிற மொசாட் என்கிற இசைக்கலைஞனின் உருவாக்கம் குறித்தும், அதற்கு முந்தையதாக சிம்பொனிகளை பீத்தோவான் உருவாக்கிய வரலாற்றுச் சம்பவங்களையும் அடுக்கிக் கொண்டே சென்றவைகோ, தமிழனின் இசைதான் உலகின் ஆதி இசை என்பதை ஆதாரங்களோடு நிறுவினார்.




யாழ் என்னும் இசைக்கருவி பாக்தாத், சுமேரியா என பழம் பெரும் நாகரிகச் சுவடுகளில் இருந்ததையும், மொகஞ்சதாரோவில் இந்த யாழ் சின்னங்கள் இருந்ததையும் குறிப்பிட்டுப் பேசினார் வைகோ.

தமிழன் பயன்படுத்திய 14 வகை யாழ் கருவிகளையும் குறிப்பிட்டு ஒவ்வொரு யாழ் கருவிக்குமான சிறப்புகளையும் விளக்கினார்.

விபுலானந்த அடிகளாரின் யாழ் நூலையும், ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிருதசாகரத்தையும் சுட்டிக்காட்டி ஆதாரங்களை வைகோ அடுக்கியது அரங்கில் பலத்த கரவொலியை எழுப்பியது.

சரிகமபதநி என்ற கர்நாடக சங்கீதம் கருக்கொள்வதற்கு முன்பே சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிட்டிருக்கும் ஏழிசையை விளக்கி, ஏழிசையை விளக்கும் சிலப்பதிகாரப் பாடலை அப்படியே சொல்லி 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் இசைக்கு இலக்கண நூல் படைத்தான் என்பதை வைகோ தனக்கே உரிய ஆணித்தரமான குரலில் அழுத்தமாகச் சொன்னபோது அரங்கம் அதிர்ந்து கை தட்டி மகிழ்ந்தது.

10 நூற்றாண்டுகள் தொன்மை வாய்ந்த இலக்கியமான பன்னிரு திரு முறை என்பதன் உள்ளடக்கம் என்ன? எந்தெந்தத் திருமுறைகளை யார் யார் பாடியது என்பதையெல்லாம் குறிப்பிட்ட வைகோ, திருவாசகம் உருவாவதற்கான பின்புலத்தையும் தனக்குரிய வரலாற்றுச் சொல்லாடல்களோடு விளக்கினார்.



தொடர்ந்தும் திருவாசகம் குறித்து அரங்கப் பார்வையாளர்களுக்குப் பாடம் கற்பித்தார் என்று கூறுமளவுக்கு திருவாசகத்தின் ஒவ்வொரு உட்பிரிவுகளையும் சுட்டிக்காட்டி, இசைஞானி இளையராஜா எடுத்தாண்டிருக்கும் பாடல்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தது என்பதையும், அந்தப் பாடலுக்கான விளக்கங்களையும் வைகோ விளக்கினார்.

தமிழன் அச்சமற்றவன், போர்க்குணம் மிக்கவன் என்பதை குறிப்பிடும் புற்றில் வாழ் அறவும் அஞ்சேன்! பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்! என்ற பாடலை இறுதியாக இளையராஜா சேர்த்திருப்பதாகக் குறிப்பிட்டு அந்தப்பாடலை மீண்டும் மீண்டும் படித்துக்காட்டினார் வைகோ.

அரசியலையே உச்சரித்துக் கொண்டிருந்த வைகோ, பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்த வைகோ, திருவாசகம் நூல் குறித்து சொற்பொழிவாற்றினார் என்பது மிகையல்ல.

வைகோவின் உரையைத் தொடர்ந்து இளையராஜா ஏற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்வின் இடையே இளையராஜாவின் இந்த இறுவெட்டில் இடம்பெற்றுள்ள பாடலுக்கான நடன நிகழ்வு நடத்தப்பட்டன. பியானோ இசையில் ஒரு பாடலும் இசைக்கப்பட்டது.

நடிகர் கமல், இந்து ராம், இசைக்கலைஞர் பாலமுரளி கிருஸ்ணா, இளையராஜாவின் குரு தட்சணாமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசினர்.

மாலை 6.30க்குத் தொடங்கிய நிகழ்ச்சி இரவு 10.30 வரை தொடர்ந்து நடைபெற்றது. நிகழ்வு நடைபெற்ற சங்கீத வித்வத்சபை வெளியே அரங்கவளாகத்திலும் பார்வையாளர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்தது கரட்டுக் காட்டு - புழுதிக் காட்டு மண்ணில் பிறந்து தவழ்ந்து எந்த இசை அறிவும் படிக்காமல் தமிழனின் தொன்மத்தை அப்படியே இன்றைய உலகிற்கு ஏற்ற வகையில் திரை உலகத்தில் தொட்டில் கட்டி ஆடவிட்ட இளையராஜாவின் புகழை பறைசாற்றுவதாகவே அமைந்திருந்தது.

## தற்கொலைக் குண்டுதாரியொருவர் துருக்கி பொலிஸாரால் சுட்டுக்கொலை



அன்காரா

துருக்கி தலைநகர் அன்காராவில் அரசாங்க அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதியில் தற்கொலைக்குண்டுதாரியென சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

இந்த தற்கொலைச் சந்தேக நபர் குண்டை வெடிக்க வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட போதிலும் நீதியமைச்சின் வெளியே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததனால் அது தோல்வியில் முடிவடைந்ததாக தகவல்கள் தெரிவித்தன.

இவரைக் கைதுசெய்ய பொலிஸார் முயன்றவேளை இவர் நீதியமைச்சின் கட்டடத்திற்கு வெளியே தப்பியோடியவேளை பொலிஸார் இவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்றுவருவதாக தெரிவித்த நீதியமைச்சர் செமில் சீசெக் மேலதிக விபரம் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

## நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜேர்மன் சான்சிலர் தோல்வி




ஜேர்மன் சான்சிலர் ஹேகாட்ஸ்குறூடர் நாடாளுமன்றில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்தார். தனது அரசாங்கத்தை தோல்வியடையச் செய்யுமாறு சான்சிலர் ஏற்கனவே தனது ஆதரவாளர்களை கேட்டபின்னர் இந்த நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இந்த நிலையில் தேர்தல் நடைபெற ஒருவருடம் இருக்கும் சூழ்நிலையில் உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா என்பது குறித்து ஜனாதிபதி கோஸ்ற் முடிவெடுக்கவுள்ளார்.

தேர்தல் முன்னரேயே நடத்தப்பட்டால் பழமைவாத கிறிஸ்தவ ஜனநாயக கட்சியிடம் அதிகாரம் கைமாறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் சான்சிலர் ஹேகாட்டின் கூட்டணி அரசாங்கம் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க மாட்டாதென பழமைவாத ஜனநாயக கட்சியின் அஞ்சலா மேகல் தெரிவித்தார். நடத்தப்பட்ட கருத்துக்கணிப் பில் 70 வீதமான ஜேர்மனியர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 18ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுவதனையே விரும்புகின்றனர்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



### அமரர் கந்தையா தம்பிராசா

(இ.போ.ச. திருத்துநர், கோண்டாவில் சபை)

மறைவு - 02.06.2005

அன்புடையீர்!

பார்த்திப வருடம் 02.06.2005 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரும், எனது அன்புக் கணவரும், எங்கள் பிள்ளைகளின் அருமைத் தந்தையாரும், எங்கள் மருமக்களின் ஆசை மாமனாருமான 'அமரர் கந்தையா தம்பிராசா' அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 01.07.2005 வெள்ளி அன்று கீரிமலை புண்ணிய தீர்த்தத்தில் இடம்பெற்றது. அத்துடன் வீட்டுக்கிருத்தியம் 02.07.2005 சனிக்கிழமை (இன்று) அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

திருமதி தம்பிராசா இராசமணியும்,
குடும்பத்தினரும்.

(1966)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

### கிளிநொச்சியில் இடம்பெற்ற

# தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாவட்ட மாநாடு!

கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்களுக்கான மாவட்ட மாநாடு நேற்று நடைபெற்றது.

நேற்றுக்காலை 10 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் சொலமன் சூ.சிறில், கிளிநொச்சி மாவட்ட உதவி ஆணையாளர் உஷா, கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவையின் பொறுப்பாளர் உமைநேசன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நிகழ்வின் சிறப்புரையினை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்த்தினார். தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் மற்றும் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சூ.சிறில் ஆகியோர் நிகழ்த்தினர்.

பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் முன்மொழிவுகள், கருத்துரைகள் என்பனவும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# புதிய தியவதன நிலமேயாக நிலங்க தால பண்டார தெரிவு!

கொழும்பு —

கண்டி சிறி தலதா மாளிகையின் புதிய தியவதன நிலமேயாக நிலங்க தால பண்டார தெரிவு செய்யப்பட்டார்.

19வது தியவதன நிலமேயைத் தெரிவு செய்வதற்கு நேற்று மாலை நடைபெற்ற வாக்கெடுப்பில் இவர் 199 வாக்குகளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இந்த வாக்கெடுப்பு நடவடிக்கைகள் கண்டி பௌத்த சபையில் நடைபெற்றன. 10 ஆண்டு பதவிக் காலத்துக்காகத் தெரிவுசெய்யப்படும் தியவதன நிலமேயின் வாக்கெடுப்பில் இம்முறை பலர் போட்டியிட்டனர்.

இவர்களுள் முன்னாள் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன, கண்டி விஷ்ணு தேவாலயம் - அளுத்நுவர தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே மொகான்பாணபொக்கே, கதிர்காமம் தேவாலயத்தினதும், இரத்தினபுரி மகா சமன் தேவாலயத்தினதும் பஸ்நாயக்க நிலமே நிலங்க தயாள பண்டார, அம்பக்கே கதிர்காம தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே சுசந்த சேனாநாயக்க, முன்னாள் வங்கி நிறைவேற்று அதிகாரியான ஆனந்த ஜயசுந்தர மற்றும் பொறியியலாளரான திக்கம மகிந்த குமார ஆகியோர் போட்டியிட்டனர்.

இந்தமுறை வாக்களிப்புக்காக 294 பேர் தகுதி பெற்றிருந்தனர். இவர்களுள் முன்னாள் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன 44 வாக்குகள் மட்டுமே பெற்றார்.

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

யாழ்பபாணம் —

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வ.ஜெயரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முன்னாள் நல்லூர் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி காங்கேயன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

NEW SCIENCE HALL
யாழ்.நகர்
A/L DAY CLASS
துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
கணித, விஞ்ஞானப் பிரிவு
திங்கள் தொடக்கம் வெள்ளிவரை

| | |
|---|---|
| PHYSICS<br>திரு.குகன் | CHEMISTRY<br>திரு.சிவத்திரன் |
| COM.MATHS<br>திரு.செந்தில்ராஜ் | BIOLOGY<br>வழமையான ஆசிரியர்<br>திரு.கெங்காதரன் |

ஆரம்பம் :- 10.07.2005
ஞாயிறு காலை 8 மணி
[C/4240]

## படையினருக்கு பதவி உயர்வு

கொழும்பு —

மட்டக்களப்பு - ஊறணியில் நேற்றுமுன்தினம் ஓட்டோ ஒன்றில் சென்றுகொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று படையினருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகம் அறிவித்தது.

சார்ஜன்ட் ஆர்.எம்.எஸ்.குலரத்ன- ஸ்ராப்சார்ஜன்டாகவும், லான்ஸ் கோப்ரல் சமன்குமார கோப்ரலாகவும், சிப்பாய் சமிந்தகுமார லான்ஸ் கோப்ரலாகவும் பதவி உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி சுவரொட்டி!

கொழும்பு —

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கில் அவரது உருவப் படத்துடன் கூடிய சுவரொட்டி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதன்மூலம் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளுக்கு அழுத்தங்களை ஏற்படுத்த முனைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தனித்தரப்பு...

எத்தகைய ஆவணங்கள் என்றாலும் சரி கைச்சாத்திடும்போது, அதில் முஸ்லிம்களின் தனித்தரப்பு ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கையும் இந்த பிரகடனத்தில் முன் வைக்கப்பட்டது.

இதேவேளை - நேற்று நண்பகல் மட்டக் களப்பு மாவட்டம் ஏறாவூரில் இது தொடர்பாக மற்றுமொரு ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

பள்ளிவாசல்களில் நண்பகல் ஜூம்மா தொழு கையை முடித்துக் கொண்ட முஸ்லிம்கள், அங்கிருந்து பிரதேச செயலகம்வரை இந்தக் கோரிக்கை உட்பட 8 கோரிக்கைகளை முன்வைத்து வாசக அட்டைகளை ஏந்தியவாறு பிரதேச செயலகம் வரை பேரணியொன்றை நடத்தினர்.

பேரணி முடிவில் இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கான மனு - பிரதேச செயலரிடமும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கான மனு - போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களிட மும் கையளிக்கப்பட்டது.

(07)

## கிழக்கில்...

புலனாய்வுத் துறையைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டது தொடர்பான விசாரணைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

முப்படையினரையும் உஷார் நிலையில் இருக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ள அதேவேளை - தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை தொடர்பாக உயர்மட்ட படை அதிகாரிகள் கூடி ஆராய்ந்துள்ளனர்.

அத்துடன், மீண்டும் போர் வெடிக்கும் நிலை ஏற்பட்டால் - படையினரை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது குறித்தும் அரசாங்கம் ஆலோசனை நடத்தியுள்ளது.

## நோர்வே...

திர விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பயிற்சிபெற்ற விடுதலைப் புலிகளின் நான்கு உறுப்பினர்கள் அண்மையில் நோர்வே தூதுவராலய வாகனத்தில் கொழும்புக்கு வந்துள்ளதாக படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், இந்த நால்வரும் ஏன் கொழும்புக்கு வந்தனர் என்பதை கண்டறிய முடியாமல் படையினர் உள்ளதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## டக்ளஸ்...

வெள்ளவத்தை ஆகிய இடங்களில் தங்கியுள்ளவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# சந்திரிகாவின் பிறந்தநாள் பரிசாக புலிகள் சடலங்களை அனுப்பினராம்

### ஜே.வி.பி கூறுகிறது

கொழும்பு —

ஜனாதிபதி சந்திரிகாவின் 60 ஆவது பிறந்த நாள் பரிசாக புலிகள் மூன்று இராணுவத்தினரின் சடலங்களை அனுப்பிவைத்திருப்பதாக ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தனது 60 ஆவது பிறந்த நாளில் புலிகளுக்கு கடல் நீதி நிர்வாக அதிகாரங்களை வழங்கி சுதந்திரமாகச் செயற்பட வழியமைத்துக் கொடுத்துள்ளார். புலிகள் அரசுக்கு மூன்று இராணுவ புலனாய்வு அதிகாரிகளின் சடலங்களைப் பரிசளித்துள்ளனர்.

புலிகள் தமது இராணுவ பலத்தை அதிகரித்துள்ளனர். ரணில் மற்றும் சந்திரிகாவுடனான உடன்பாடு மூலமே இந்தப் பலத்தை அவர்கள் பெற்றிருப்பதாகவும் ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

## பொதுக்கட்டமைப்பில்...

பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த- உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் முதியன்சலாகே சுமனவீர ஜயசிங்கவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவரும், 5 ஆவது பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலும் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜராகாத விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் சண்முகலிங்கம் றஞ்சன், நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யு.ஜே.எஸ். கருணாரட்ன ஆகியோருக்கே அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

தெரியாத - அறியாத ஒருதரப்பினருக்கு நிதியைக் கையாளும் அதிகாரத்தைக் கொடுக்கும் சுனாமி நிவாரணசபை உடன்படிக்கையினூடாக தெரிந்தே அரசே நீதி சம்பந்தமான ஒழுங்கு விதிகள் மீறப்பட்டுள்ளதாகவும் -

அரசியலமைப்புக்கு முரணாக கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கையினூடாக மேற்கொள்ளப்படும் நிதிப்பரிமாற்றங்களுக்கு தடை விதிக்குமாறும் -

அந்த உடன்படிக்கையை செல்லுபடியற்றதாக்குமாறும் கோரி இந்த 3 வழக்குகளும் கடந்தவாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 13 மீனவர்கள் திருமலையில் கைது

கொழும்பு —

திருகோணமலை திரியாய் கடற்பகுதியில் டைனமட் வெடிபொருட்களுடன் 4 டிங்கிப் படகுகளைக் கைப்பற்றியுள்ள கடற்படையினர் அவற்றிலிருந்த 13 பேரையும் கைதுசெய்துள்ளனர்.

## அரசிடம் தெளிவு...

தாம் யுத்தநிறுத்த உடன்படிக்கை குறித்தும் சமாதான முயற்சிகள் குறித்தும் அதிக கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்த ஹக்ரப் ஹொக்லண்ட் - விடுதலைப் புலிகளின் பயணங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பான விடயத்தில் இரு தரப்பினருக்கும் இடையிலான உறவு அவ்வளவு நல்லமுறையில் இல்லை எனவும் கூறினார்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் - கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின்போது தமது உறுப்பினர்கள் கிழக்குக்கான பயணங்களை மேற்கொள்ளும்போது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு பா்துகாப்பு தரப்பு தவறினால் போராளிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை தாங்களே வழங்க நேரிடும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை புத்தர்...

சிறிலங்கா அரசே தமிழர் தாயக பூமியில் புத்தர் சிலைகளை நிறுவாதே. இந்தப் புத்தர் சிலை மறுபடியும் சிறிலங்காவில் போரை ஏற்படுத்தலாம்.

போன்ற வாசகங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் தாங்கியிருந்தனர். இந்த அமைதிப் போராட்டத்தின் முடிவில் யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகத்திற்கு மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

மே 18 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட நீதிபதி சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர் சிலையை உடன் அகற்றுமாறு கட்டளையிட்டார். மீண்டும் தனது தீர்ப்பை மே 25 ஆம் திகதி உறுதிசெய்தார். ஆனால், இலங்கையிலுள்ள பௌத்த அரசாங்கமும் அதன் பாதுகாப்புப் படையும் நீதிபதியின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு எதிர்மாறாக, சட்டவிரோதமாக நிறுவப்பட்ட இந்தப் புத்தர் சிலைக்கு பலத்த ஆயுத பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

இதேவேளை, இந்தப் புத்தர் சிலையை சட்டவிரோதமாக நிறுவியோர் இதற்கு ஓர் நிரந்தரக் கட்டடத்தை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் புத்தர் சிலை விவகாரத்தில் அரசு நீதிமன்றத்தின் கட்டளைகளை ஒரு மாத காலமாகியும் நிறைவேற்றவில்லை.

மாறாக ஒரு மாத காலத்தின் பின்னர் அதாவது, சென்ற வாரம் ஒரு இனவாத பௌத்த நீதிபதியைக் கொண்ட மேல் முறையீடு பரிசீலனை நீதிமன்றத்தின்மூலம் திருகோணமலை மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு ரத்துச்செய்யப்பட்டது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான எந்தவித நீதிமன்றக் கட்டளைகளும் உடன் நிறைவேற்றப்படுகிறது. ஆனால், தமிழர் விவகாரத்தில் பௌத்த சிங்களவருக்கு எதிரான எந்த வித நீதிமன்றத் தீர்ப்போ வலுவற்றதாகி வருகிறது.

இலங்கைப் படைகளின் பிரதம தளபதியும், நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதி விரும்பியிருந்தால் இந்தப் புத்தர் சிலை விவகாரத்தை திருகோணமலை மாவட்ட நீதிபதியின் உத்தரவுடன் மிகவும் இலகுவாக அகற்றியிருக்கலாம். மாறாக இந்தப் புத்தர் சிலைக்கு பாதுகாப்புக் கொடுத்து சிலையை அகற்றவிடாது கவனிப்பது இரு வேறுபட்ட நீதிமுறைகள் இலங்கையில் நடைமுறையில் உள்ளன என்பதைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன.

எனவே, இலங்கையின் தேசிய சட்டத்தின் கீழ் செயலிழந்துள்ள மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாகிய உங்களிடம் நீதிகேட்டுக் கூடியுள்ளோம். திருகோணமலையில் இரத்தக் களரியைத் தவிர்க்கவும் நீங்கள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு சர்ச்சைக்குரிய புத்தர் சிலையை அகற்ற உதவுமாறு வேண்டுகின்றோம் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

YOGI'S
ACADEMY OF BEAUTY CULTURE, HAIR DRESSING AND HOME SCIENCE
03.07.2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு CAKE EXHIBITION தொடர்பான கருத்தரங்கு நடைபெற உள்ளதால், பயிற்சியை முடித்த மாணவிகள் அனைவரும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.
ஆசிரியை,
75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக]
[1965]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



MTS இன் நாட்டிய மயில்' 2005

சர்வதேச ரீதியில் நடாத்தப்படவுள்ள
MTSஇன்
'நாட்டியமயில் 2005'இற்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

போட்டிக்கான விதிமுறைகளும் - நிபந்தனைகளும்

- கருப்பொருள்: வர்ணம் (தமிழில் அமைதல் வேண்டும்)
  நேரம் (25 நிமிடங்கள் மட்டுமே)
- முதற்கட்டப் போட்டியில் பக்கவாத்தியம் அல்லது ஒலிநாடா உபயோகிக்கலாம்.
- உடை அலங்காரமும், ஒப்பனையும் பரத நாட்டிய நிகழ்வு போன்று அமைந்திருப்பின் விசேட புள்ளிகள் வழங்கப்படும்.
- விண்ணப்பங்கள் நடன ஆசிரியரின் உறுதிப்படுத்தலுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரருக்கான முழுமையான பொறுப்பு, உறுதிப்படுத்தும் ஆசிரியருக்குரியது.
- விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே ஏற்றுக்கொள்ளப்படும்.
- விண்ணப்பதாரர் 30-07-2005 இல் 16 வயதிற்கு மேற்பட்டவராயும், 25 வயதிற்கு உட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.
- போட்டியாளர்கள் தங்களது சுயவிபரங்களை எமது நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்படிவத்தில் அல்லது அதன் நகலில் விண்ணப்பிக்கலாம்.
- ஜுலை மாதம் 10ம் திகதிக்குள் விண்ணப்பித்தல் வேண்டும்.



விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

MTS INTERNATIONAL (PVT) LTD

532, ஆர். ஏ. டிமெல் மாவத்தை, கொழும்பு-03. தொலைபேசி: 2597124



நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஊடக அனுசரணையுடன்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
## விவாத மன்றம் நடாத்தும் மாபெரும் விவாத சுற்றுப் போட்டி

## 'விவாத மேடை - 2005'

**மேற்படி சுற்றுப்போட்டியானது யாழ். மாவட்டம் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையே விவாதத்திறமையை வளர்க்கும் முகமாக எதிர்வரும் ஜுலை மாதம் 11 ஆம் திகதி முதல் (11.07.2005) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.**

- இப்போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு வெற்றிக் கேடயமும், பெறுமதிமிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- இப் போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும்

இளநிலைப் பிரிவு தரம் - 09, 10, 11
முதுநிலைப் பிரிவு தரம் - 12, 13

- ஒவ்வொரு பிரிவிலும் 4 பேர் கொண்ட அணிகளே பங்குபற்றலாம்.
- பங்குபற்ற விரும்பும் அணிகள் போட்டி நடைபெறும் நாளன்று காலை 9 மணிக்கு பொறுப்பாசிரியர்
- சகிதம் யாழ். இந்துக் கல்லூரிக்கு சமூகமளிக்கவேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை ஜுலை 6 ஆம் திகதிக்கு முன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சமர்ப்பிக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு :**
செந்தில்நாதன் சொபிசன் (ஒழுங்கமைப்பு குழுத் தலைவர்)
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
யாழ்ப்பாணம். T.P : 077 - 6093093

மேலதிக விபரங்கள் நாளை


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால்**
**யாழ்.மாவட்டத்துக்கு நிவாரணத்துக்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி**
**வழங்கலுக்கான கேள்வி கோரல்**

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 யூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கு தேவையான அரிசியை - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்திவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ. கூ சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ப.நோ.கூ சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ. கூ சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 யூலை (MT) | 2005 ஒகஸ்ட் (MT) | 2005 செப்ரெம்பர் (MT) |
| 1 | சாவகச்சேரி | 90 | 90 | 90 |
| 2 | கைதடி | 35 | 35 | 35 |
| 3 | கொடிகாமம் | 100 | 100 | 100 |
| 4 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 5 | கட்டைவேலி-நெல்லியடி | 15 | 15 | 15 |
| 6 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 7 | புலோலி | 15 | 15 | 15 |
| 8 | மருதங்கேணி | 15 | 15 | 15 |
| 9 | யாழ்ப்பாணம் | 90 | 90 | 90 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 35 | 35 | 35 |
| 12 | நீர்வேலி | 35 | 35 | 35 |
| 13 | மானிப்பாய் | 25 | 25 | 25 |
| 14 | பண்டத்தரிப்பு | 25 | 25 | 25 |
| 15 | அளவெட்டி-மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பளை | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 60 | 60 | 60 |
| 18 | சுன்னாகம் | 55 | 55 | 55 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 25 | 25 | 25 |
| 20 | வேலணை | 25 | 25 | 25 |
| 21 | ஊர்காவற்றுறை | 25 | 25 | 25 |
| 22 | காரைநகர் | 25 | 25 | 25 |
| 23 | தீவகம் | 15 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 900 | 900 | 900 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.07.04 ஆம் திகதி தொடக்கம் 2005.07.17 ஆம் திகதிவரையிலான காலப் பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இந்த வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டு அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 18.07.2005 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விக்காரர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

07. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

08. கேள்விக்காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்குத் தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும், அச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும், அருகதை உடையவர்கள் ஆவர். ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் விநியோகிக்கப் படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாகச் செயற்படுத்தல் முறிக்காக (Perfor mance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்வி பரிசீலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எப்போதும் எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட் களுக்கு வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்,**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்,
**01.07.2005**

(C/4252)

# ஆனையிறவு உப்பள மகளிர் தங்குமிட விடுதி திறந்துவைப்பு

ஆனையிறவு—

ஜி.ரி.இசற் அனுசரணையுடன் பொருண்மிய மதியுரையகத்தால் உப்பள செயலக வளாகத்தில், புதிதாகக் கட்டப்பட்ட ஆனையிறவு உப்பள மகளிர் தங்கும் விடுதி மற்றும் பொது மண்டப திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழீழ பொருண்மிய திட்டமிடல் பணிப்பாளர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண. பிதா கருணாரட்ணம் அடிகளார் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியத் கொடியை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து மகளிர் தங்கும் விடுதியின் முதலாவது கட்டடத்தை வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண. பிதா கருணாரட்ணம் அடிகளார் நாடாவை வெட்டித் திறந்து வைக்க, ஏனைய கட்டடங்களை நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்புப் பிரதிநிதிகள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

இந்த வளாகத்தில் அமைக்கப்பட்ட பொதுமண்டபத்தை வடக்கு - கிழக்கு மாகாண ஜி.ரி. இசற் நிறுவன வடமாகாணப் பணிப்பாளர் கரட்டா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் உரையை தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார். சிறப்புரையை ஜி.ரி.இசற் நிறுவன வடமாகாணப் பணிப்பாளர் கரட்டா, கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற இணையங்களின் ஒன்றியத் தலைவர் கணேசபிள்ளை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், பொருண்மிய மதியுரையகத் துணைப் பொறுப்பாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

நன்றியுரையை ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத் திட்ட அலுவலர் வேலாயுதபிள்ளை நிகழ்த்தினார்.

## மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் மாவீரர் குடும்பங்களுடன் சந்திப்பு

வவுனியா—

வவுனியா நெடுங்கேணிப் பிரதேசத்தில் மாவீரர் குடும்பங்களை கடந்த புதன்கிழமை தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

நெடுங்கேணியில் பழம்பாசிப் பிரதேசத்தில் அமைந்துள்ள மாவீரர் குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று மாவீரர்களின் பெற்றோர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன் தண்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற வாராந்த வீரமுரசு நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## இலங்கை வங்கி இடமாற்றம்

கிளிநொச்சி—

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் இயங்கி வரும் இலங்கை வங்கியின் கிளிநொச்சி கிளை, கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கவுள்ளதாக இலங்கை வங்கியின் வடவலய உதவிப்பொது முகாமையாளர் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி அரச ஊழியருக்கான பயிற்சிப்பட்டறை அநுராதபுரத்தில்

கிளிநொச்சி—

கிளிநொச்சி அரச ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று அண்மையில் அநுராதபுரம் பிரிதியா ஹொட்டேலில் 3 நாட்கள் நடைபெற்றது.

டெனிஸ் அகதிகள் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் -

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் மற்றும் யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி, பளை, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசங்களின் உதவி அரசாங்க அதிபர்கள் உட்பட, பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி எஸ்.ரங்கநாதன், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், அரச ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும், சட்டத்தரணி சுதர்சன் இலங்கையில் பெண்களின் உரிமைகள் தொடர்பாகவும், கேற்றே நோட்டன், உமா ரமேஷ் ஆகியோர் வீட்டு வன்முறைகள் தொடர்பாகவும், சட்டத்தரணி கிரிஜா நிமலதேவா இலங்கையில் நீதிமன்ற நடைமுறைகள், காணி உரிமைகள் தொடர்பாகவும், கருத்துரைகளை நிகழ்த்தினர்.

இந்தப் பயிற்சிப் பட்டறை பயனுள்ள அறிவூட்டல் நிகழ்வாக அமைந்தது என அரச ஊழியர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## முள்ளியவளைப் பிரதேசத்தில் கரும்புலிகள் திருவுருவப்பட பவனி

முல்லைத்தீவு—

முள்ளியவளை பிரதேசத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வில்-கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் தாங்கிய பவனியை முள்ளியவளை பிரதேசத்திலிருந்து ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் - கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேசப் பொறுப்பாளர் முல்லைவீரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் கருத்துரையை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொருளாளர் ஜெகதீஸ்வரன், வர்த்தக சங்க உப தலைவர் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வில் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

மேலும் பிரதேச சபையில் இருந்து கரும்புலிகளின் திருவுருவப்படம் தாங்கியவாறு பேரணி வித்தியானந்த முன்றலை வந்தடைந்ததும், கரும்புலிகள் நிகழ்வுகளை அங்கே நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## புனித அந்தோனியார் ஆலய திறப்பு விழா!

பூநகரி—

2001 ஆம் ஆண்டு-கிபிர் தாக்குதலால் முற்றாக அழிக்கப்பட்ட பூநகரி - பள்ளிக்குடா புனித அந்தோனியார் ஆலயம் கிறிஸ்தவ விவகார அமைச்சு, யாழ்.ஆயர், மக்களின் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் நாளை மாலை 5 மணிக்கு கிளிநொச்சி, முல்லைத் தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை தேவசகாயம் அடிகளாரால் கொடியேற்றத்துடன் திறப்புவிழா நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தின் நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் திருப்பலி நடைபெற்று, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திருப்பலி நடைபெறவுள்ளது.

# முல்லைத்தீவு வைத்தியசாலையில் போதிய அன்புலன்ஸ்கள் இல்லை

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் அன்புலன்ஸ் வாகனத்துக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்த மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு 15 அம்புலன்ஸ் வாகனங்கள் தேவையாகவுள்ள போதிலும், 6 அம்புலன்ஸ் வாகனங்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை இந்த அம்புலன்ஸ் வாகனங்களைச் செலுத்துவதற்கான சாரதிகள் பற்றாக்குறை நிலவி வருவதாகவும், முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

அடிப்படைச் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, கிராம மட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டு வருவதாகவும், யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 10 ஆரம்ப சுகாதார நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூலை - 02

1566 : எதிர்கால நிகழ்ச்சிகளை சரியாகக் கணித்து வெளியிட்ட உலகப் புகழ் பெற்ற பிரான்சியரான நஸ்ரடாம்ஸ் காலமானார்.

1776 : நியூ ஜெர்சியில் பெண்களுக்கு வாக்குரிமையளிக்கும் சட்டம் நிறைவேறியது.

1798 : உலகின் முதலாவது நீராவிப் படகை வடிவமைத்துக் கட்டிய அமெரிக்கரான ஜோன் பிட்ச் மரணமானார்.

1843 : ஆங்கில வைத்திய முறையில் புலமை பெற்றிருந்தும், அதில் அதிருப்தி அடைந்து, ஹோமியோபதி சிகிச்சை முறையை ஆரம்பித்த சாம்யூல் ஹனிமன் காலமானார்.

1865 : லண்டன் வைட் சாப்பலில்-நடந்த சமய புத்தெழுச்சி இயக்க கூட்டத்தில் வைத்து வில்லியம் பூத் என்பவர் இரட்சணிய சேனையை உருவாக்கினார்.

1917 : ஜேர்மனிக்கும், பிரிட்டனுக்கும் இடையிலான போர்க் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் ஒன்று ஹேக் நகரில் கையெழுத்திடப்பட்டது.

1918 : முதலாம் உலக யுத்தம் தொடர்பாக பிரான்ஸுக்கு இதுவரை பத்து லட்சம் அமெரிக்கப் படையினர் அனுப்பப்பட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி வுட்ரோ வில்சன் அறிவித்தார்.

1921 : அமெரிக்க ஜனாதிபதி ஹோர்டிங் ஜேர்மனியுடனும், ஒஸ்ரியாவுடனும் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

1931 : பாலிலுள்ள வெண்ணையின் அளவைக் கொண்டு பாலின் தரத்தை நிர்ணயிக்கும் பொப்காக் ஆய்வு முறையைக் கண்டுபிடித்த அமெரிக்க விஞ்ஞானி ஸ்டீபன் மோல்ட்டன் பொப்காக் காலமானார்.

1964 : அமெரிக்காவில் இன வழியிலும், மரபு வழியிலும் பாகுபாடு காட்டப்படுவதைத் தடைசெய்யும் மக்கள் உரிமைச் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் ஒப்பமிட்டார்.

1971 : ஸ்கொட்லாந்தில், கிளைட் நதியின் குறுக்காகக் கட்டப்பட்டிருக்கும் எர்ஸ்க்கைன் பாலம் பொதுமக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

1972 : சிம்லா உடன்படிக்கையில், இந்திராகாந்தியும், பூட்டோவும் ஒப்பமிட்டனர்.

1976 : இருபது ஆண்டுகால போரின் பின், வடக்கு வியட்நாமும், தெற்கு வியட்நாமும் அதிகாரபூர்வமாக ஒன்றிணைந்தன. இதன் தலைநகர் ஹனோய் ஆகும். இந்த இணைவின் மூலம் வியட்நாம் சோசலிச குடியரசு உதயமானது.

✤ : தனது நாட்டில் இராணுவப் புரட்சியைத் தூண்டியதாக எனக் கூறி, லிபியாவுடனான இராஜரீக உறவை சூடான் முறித்துக் கொண்டது.

1983 : இந்தியாவின் முதலாவது அணுமின் நிலையமான கல்பாக்கம் அணு மின் நிலையம் தொழிற்பட ஆரம்பித்தது.

1985 : ஹோலி வால் நட்சத்திரத்தின் மையக் கருவை நோக்கி வினாடிக்கு 70 கி.மீ. வேகத்தில் பயணிக்கும் கியோட்டா என்ற விண்கலம் செலுத்தப்பட்டது.

1988 : இலங்கையில் முதலாவது மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது.

1990 : ஸ்லோவேனியா தனி நாடாக சுதந்திரம் பெற்றுக் கொண்டதாக அறிவித்தது.

✤ : முஸ்லிம் மக்களின் புனித நகரான மெக்காவுக்குச் செல்லும் வழியிலுள்ள ஒரு சுரங்கப் பாதையில், யாத்திரிகர்கள் சன நெரிசலில் தள்ளுப்பட்டும், மிதிபட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர்.

1994 : பலஸ்தீன மக்களுக்கென தனி நாடு கேட்டு, கடந்த இருபத்தியேழு ஆண்டுகளாக நாடோடியாக, கெரில்லாப் போர் புரிந்துவந்த பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர், காலஞ் சென்ற யாசீர் அரபாத், தன்னாட்சி பெற்ற காஸா பிரதேசத்தினுள் அரசுத் தலைவராக நுழைந்தார்.

2001 : உலகில் முதன் முறையாக அமெரிக்காவில் நடந்த ஏழு மணி நேர சத்திர சிகிச்சைக்குப்பின், இதய நோயாளி ஒருவருக்கு செயற்கை இருதயம் பொருத்தப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# மீன்பிடிக்க கடற்படையினர் அனுமதி மறுப்பு; மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு!

யாழ்ப்பாணம்

சுழிபுரம் - திருவடிநிலை கடலில் தமக்கு மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படாமை குறித்து, காட்டுப்புலம் சுழிபுரத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தக் கடற்பரப்பில் மீன் பிடித் தொழிலை மேற்கொள்ள கடற்படையினரின் அனுமதிப் பத்திரம் அவசியமானது என கடற்படையினர் தெரிவித்ததை அடுத்து, அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு கடற்படையினரிடம் விண்ணப்பித்தும், இதுவரை அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தாம் இந்தக் கடற்பரப்பில் மீன் பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ள மீனவர்கள் -

சுனாமி அனர்த்தம் காரணமாக மீன்பிடி உபகரணங்களை இழந்த நிலையில் தென்னிந்திய திருச்சபையால் தற்போது உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உபகரணங்கள் இருந்தும், அனுமதிப் பத்திரம் வழங்கப்படாமை காரணமாகத் தம்மால் மீன்பிடிக்க முடியாதுள்ளதாகவும், இதன் காரணமாகத் தாம் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டை காட்டுப்புலம் சுழிபுரத்தைச் சேர்ந்த 16 மீனவர்கள் கெங்காதேவி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஊடாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்துள்ளனர்.

# இளைஞரை காணவில்லையென ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம்

இளைஞர் ஒருவரைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில், காணாமற்போனோரின் உறவினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கே.கே.எஸ் வீதி, தாவடி கொக்குவிலைச் சேர்ந்த மகாலிங்கம் விஜயகாந் (வயது 23) என்பவரே காணாமல் போனவராவார்.

கடந்த ஏப்ரல் 30 அன்று இவர் காணாமற்போயுள்ளார். காணாமற்போன இவர் பரீட்சைக்காக படித்துக் கொண்டிருந்தார் என்றும், பரீட்சைக் கற்றல் நடவடிக்கைகளுக்காக வெளியே சென்ற போதே - இவர் காணாமற் போயுள்ளதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமற்போனவரை பல இடங்களில் தேடியும் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும், அவர் தொடர்பான எந்தவித தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவரின் கல்வித்தரத்தை மேம்படுத்த மாணவர் பேரவையினர் நடவடிக்கை!

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அனுசரணையுடன், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கிராமங்கள் தோறும் கல்வி தொடர்பான கருத்தரங்குகளையும், மாலை நேர வகுப்புகளையும் நடத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை இன்று பாடசாலை செல்லும் வயதில், பாடசாலை செல்லாத மாணவர்கள், பாடசாலைக் கல்வியை ஒழுங்காகப் பெறமுடியாத மாணவர்கள், அடிப்படைக் கல்வி வசதி இல்லாதவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டு செல்கிறது.

இந்த நிலையை மாற்றி, எப்போதும் கல்வியறிவுடைய சமுதாயமாக வாழ வகை செய்யும் நோக்குடன் - இந்தக் கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

ஒவ்வொரு கிராமங்களிலும் அந்தந்தப்பகுதி பல்கலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் உதவியுடன் இந்தக் கல்விச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாலை நேர வகுப்புகளில் பங்குகொள்கின்ற மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகள், அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள் வழங்கப்பட்டு, அவர்களது கற்றல் செயற்பாடுகளை இலகுபடுத்தும் வகையில், செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு கிராமங்கள் தோறும் இத்தகைய கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள இருப்பதாகவும், கிராம மக்களின் ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைக்குமானால், எதிர்காலத்தில் யாவரும் கல்வியறிவுடைய ஓர் சமுதாயமாக உருவாக முடியும் என, இந்தக் கல்விச் செயற்பாட்டுத் திட்டத்தின் பொறுப்பாளர் தெரிவித்தார்.

## திரைப்படக் கூட்டுத்தாபனத்தின்

# தமிழ்ப் பிரிவுக்கான அலுவலகம் யாழ்.செயலகத்தில் திறக்கப்படும்!

யாழ்ப்பாணம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவுக்கான அலுவலகம் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் திறக்கப்படவுள்ளதாக, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளர் க.தேவதாஸ் தெரிவித்தார்.

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை யாழ். மாவட்டத்தில் விஸ்தரித்து, சினிமா தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, யாழ். மாவட்ட கலைஞர்களை ஒன்றிணைத்து நல்ல சினிமாக்களையும், சினிமா கலைஞர்களையும் உருவாக்க இந்த அலுவலகம் பேருதவியாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (14)

# சாதாரணதர வகுப்பு மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து, இந்த ஆண்டு சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு, வலயக் கல்விப் பணிப்பாளரால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாட ரீதியாகவும் மாணவர்களின் சகல விபரங்களையும் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர், வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் எத்தனை மாணவர்களை அடைவு மட்டத்துக்கு எட்டச்செய்ய முடியுமென, ஒவ்வொரு பாட ஆசிரியர்களும் உறுதிபடத் தெரிவிக்க வேண்டும்.

இதில் ஏதேனும் தவறுகள் ஏற்படுமிடத்து, அந்தந்த பாட ஆசிரியர்களிடம் விளக்கம் கோரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (101)

# எதிர்வரும் திங்களன்றே மத்திய கல்லூரி ஆரம்பம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாளைமறுதினம் மீண்டும் இரண்டாம் தவணையின் மீதிக் கால நடவடிக்கைகளுக்காக ஆரம்பமாகவுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் முடிவடைந்து, சகல பாடசாலைகளும் திறக்கப்படும் போது மத்திய கல்லூரியும் திறக்கப்படும்.

பரீட்சை விடைத்தாள்களின் மதிப்பீட்டு வேலைகளில் பெருமளவு வேலைகள் முடிவடைந்துள்ளன. மீதி மதிப்பீட்டு வேலைகள் நடைபெற்றாலும், கல்லூரியின் கற்றல் செயற்பாடுகளையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே ஆசிரியர்களும், மாணவர்களும் எதிர்வரும் திங்களன்றே கல்லூரிக்கு சமுகளிக்க வேண்டுமென கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.





யாழ்.மறைக் கல்வி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற 'சூரியக்குளியல்' நூல் வெளியீட்டு விழாவில் நூலாசிரியர் கவிஞர் சூரியநிலா (ஆ.ஜென்சன் றொனால்ட்) ஏற்புரை ஆற்றுவதையும், செபக் நிறுவன வெளியீட்டுப் பிரிவு ஆசிரியர்களில் ஒருவரான அருட்சகோதரி ஜெயசீலி சிறப்புப் பிரதியொன்றை கவிஞர் சோ.பத்மநாதனிடமிருந்து பெறுவதையும் படங்களில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## அதிகரித்த சம்பள கொடுப்பனவு

நெடுந்தீவு

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கான 2 ஆயிரத்து ஐநூறு ரூபா அதிகரித்த சம்பளப் படி கடந்த ஜூன் மாத சம்பளத்துடன் வழங்கப்பட்டது.

2005 ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்கப்படவேண்டிய இந்த அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு - கூட்டுறவுச் சங்கத்தின் நிதி நெருக்கடி காரணமாக வழங்கப்படாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இது தொடர்பாக 'நமது ஈழநாட்டில்' வெளிவந்த செய்தியையடுத்து, யாழ். மாவட்ட கூட்டுறவுத் துறைசார் உயர் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலமே இந்த மாதத்துக் கான அதிகரித்த படி சம்பளத்துடன் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## இரத்த தானம்

யாழ்ப்பாணம்

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கைநெறியைப் பூர்த்திசெய்து வெளியேறும் மாணவ, மாணவிகள் 21 பேர் கடந்த புதன்கிழமை இரத்ததானம் செய்தனர். (63)

## விளையாட்டு விழா

மானிப்பாய்

மனோன்மணி சனசமூக நிலையத்தின் ஆதரவுடன், பாலர் கல்விக்கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் மனோன்மணி பாலர் பாடசாலைச் சிறார்களின் விளையாட்டு விழா - நாளை பிற்பகல் ஒரு மணிக்கு பாலர் பாடசாலையின் ஆசிரியை பெருமாள் ஜெயந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரி க.இராமநாதனும், சிறப்பு விருந்தினராக கு.சாந்தமோகனும் கலந்துகொள்ளவுள்ளனர். (100)

❖ ❖ ❖

பாலர் கல்விக்கழகத்தின் கீழ் இயங்கும் நல்லூர் ஞானக்குழந்தை இல்லத்தின் 13 ஆவது வருடாந்த விளையாட்டு விழா - நாளைமறுதினம் பிற்பகல் 1.30 மணியளவில் நல்லூர் தெற்கு சனசமூக விளையாட்டு மைதானத்தில், ஞானக்குழந்தை இல்லத்தின் ஆசிரியை ஸ்ரீவாணி ஜெயதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் ஞா.ஜெயக்குமாரும், சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக்கழகத்தின் தலைவர் சரோஜினி ஜெயபாலசிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (100)

## வருடாந்த உற்சவம்

சாவகச்சேரி

சாவகச்சேரி - டச்சு வீதி அருள் மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பார்த்திப வருஷ அலங்கார உற்சவம் எதிர்வரும் 06 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறும் இந்த உற்சவத்தில் 16 ஆம் நாள் (21.07.2005) வியாழக்கிழமை ஸ்ரீ பழனிவேல் பவனியும், (22.07.2005) வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

விழாக்கால கிரியைகள் யாவும் சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ.து.ஜெகதீஸ்வரக் குருக்களால் நிகழ்த்தப்படும். (24)

## அரங்க நிகழ்வு

சங்கானை

சங்கானை பிரதேச செயலகத்தில் 'ஊர் உயர உழைப்பவர் கூடும் அரங்கு' எனும் தலைப்பில் அரங்க நிகழ்வொன்று நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக 2 ஆம், 3 ஆம் வருட நுண்கலைத்துறை மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த விழாவில் - வலி.மேற்கைச் சேர்ந்த சமூகமட்ட, விளையாட்டுக்கழக பிரதிநிதிகள், சண்டிலிப்பாய் அரசியற் துறை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் உட்பட பெருமளவானோர் கலந்துகொள்ளவுள்ளனர். (207)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

உகவை மூன்று



பெயர் : உ.சிஜானி
முகவரி : வட்டக்கச்சி.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........
முகவரி : ..........
பிறந்த ஆண்டு : ..........

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

20+ YEARS CONTRIBUTION TOWARDS e-Sri Lanka by IDM

# IDM
## Computer Studies Pvt (Ltd)
## Jaffna Branch



Visite-www.idm.edu, www.idm.lk

நல்லூர் ரோட்டறிக் கழக அனுசரணையுடன் எமது நிறுவனம் வழங்கும்

## மாபெரும் இலவச கணனிப் பயிற்சிக் கருத்தரங்கு

01) இடம் - வேம்படி மகளிர் கல்லூரி
காலம் - 02.07.2005 (சனிக்கிழமை)
நேரம் - 10.00 மணி (மு.ப)

02) இடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
காலம் - 03.07.2005 (ஞாயிற்றுக் கிழமை)
நேரம் - 10.00 மணி (மு.ப)

பங்குபற்றும் அனைவருக்கும் எமது நிறுவனத்தால் பெறுமதி மிக்க சான்றிதழ்களும் கட்டணச் சலுகைகளும் வழங்கப்படும்.

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் மற்றும் பெற்றோர்களும் கணனித்துறை ஆர்வலர்களும் பங்குபற்றி பயன் பெறவும்

**2005ம் ஆண்டு A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கீழ்வரும் சர்வதேச தரம் வாய்ந்த கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம்.**

- **DICS - Diploma in Computer Studies - For A/L Students** [ BTEC Edexcel International U. K - Duration 4 months]
- **NCC - B.Sc and M.Sc Degree Program** [ London Metropolitan University - UK ]
- **HND - BTEC Edexcel International U. K**
- **MCP - Microsoft Certified Professional**
- **MCSE - Microsoft Certified System Engineering**
- **CIW - Certified Internet Web master Course**
- **A+ - CompTIA - Hardware Traning Course**
- **Diploma in Computerized Accounting Package**
- **Diploma in Multimedia**

**About IDM -**
- First Computer School in Sri Lanka
- Established in 1981
- First to introduce On-line Testing
- First introduce - International Bachelors Master Degrees and Professional ICT exams BCS, ACS

Etc.........



## Our International Affilications :-

BTEC Edexcel International - UK, LONDON metropolitan university, ACS, BCS, NCC education, karROX Technologies Ltd., BIT, Microsoft CERTIFIED Technical Education Center, CIW CERTIFIED INTERNET WEBMASTER, MICROSOFT OFFICE, VUE, A+, Novell, HOLMESGLEN INSTITUTE, PROMETRIC, MYOB, UNIVERSITY OF WOLVERHAMPTON, Lotus Authorized Education Center, NEBOT

**Special Discount for A/L Students**

மேலதிக விபரங்களுக்கும் அனுமதிகளுக்கும் -

**216 Navalar Road, Jaffna.**

**T.P - 021 - 4591398**

**On - line Testing Center Available**